ஆவணி 1979

# சிரித்திரன்




செய்தொழில்
தெய்வம்
சிரிப்பே
சீவியம்

விலை ரூபா 1-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**For quality products**

**Always patronize**

**Products manufactured**

**by**

# MIDWOOD INDUSTRIES

JAFFNA SRI-LANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்திரன்

செய்தொழிலே தெய்வம்
சிரிப்பே சீவியம்

''பாவம் மனிதன்'' என்றது குயில்

''ஏன்'' என்று கேட்டது கொக்கு

''ரசனை இல்லாதவன் மனிதன் என்றது குயில்—

''ஏன்'' என்றது கொக்கு.

''டப்பா'ச் சங்கீதத்தை ரசிப்பவன்'' என்றது குயில்,

''உண்மைதான்...டப்பா மீனையும் அல்லவா ருசித்து உண்பவன் என்றது கொக்கு.



ஒரு: ஆடையிலிருந்து ஒருதரின் அறிவைக் கூறமுடியுமா?

ஆசிரியர்: கஷ்டம்... மினி அணிபவள் மக்ஸிமம் மார்க்ஸ் எடுக்கிறாள்... மக்ஸி அணிபவள் மினிமம் மார்க்ஸ் எடுக்கின்றாள்...

...அதிமதுரம்





எம். பி ஐயா... என்காதலை ஒரு பெண் நிராகரிக்கின்றாள் ஒரு சிபார்சுக் கடிதம் தாறீங்களா...

பெண் தெய்வம்: என்ன கவலையோடு இருக்கிறீங்க?

ஆண் தெய்வம்: மனிதனை சிந்திக்கத் தெரிந்தவனாகப் படைத்தேன் இப்போ அவன் நான் இருக்கிறேனா இல்லையா எனச் சிந்திக்கின்றான்.

—ஜோக்கிரட்டீஸ்

பிச்சைக்காரன்; பெரியார்களுக்கு வீதியில் நிறுவும் சிலைகளைப் பெரிதாக நிறுவினால் நல்லது

மற்; ஏன்!

பிச்சைக்காரான்; அதன் நிழலில் இருந்து பிச்சை எடுப்பதற்குச் சௌகரிகமாக இருக்கும்.

—ஜோக்கிரட்டீஸ்

## சிரித்திரன் அகராதி

வளையல்: வீட்டிற்கும் அடைவுகடைக்கும் இடையில் ஓடித்திரியும் தங்க வளையங்கள்.

இருமல்: சிகரட் பிரியர்கள் இசைக்கும் அபஸ்வரகீதம்


கிளப்: வசதிபடைத்த ஆண்டிகளின் மடம்

சூரியன்: இருள் குப்பையைகூட்டும் ஒளிக்கீற்று விளக்குமாறு.

ஓவியம்: திரையின் நிர்வாணத்தை மூடும் ஆடை.

ஆவணி 1979
நகை 17 - சுவை 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பே. குமாரதேவன் திருமலை

கே; எவன் மக்கள் தலைவன்.

ப: தனது மக்களின் அத்தியாவசிய தேவைக்கு மீதியான பணமெல்லாம் பொதுமக்களுக்குச் சொந்தமென நினைப்பவன்.

● ●

செல்வி மணிமேகலை மாணிக்க
மட்டுநகர் ராசா

கே: ஆங்கில இலக்கியம் சிறப்புற இலங்கையர் ஏதும் செய்துள்ளனரா?

ப: அழகு சுப்பிரமணியத்தின் மணியான கதைகளும் தம்பி முத்துவின் முத்தான கவிதைகளும் அழகூட்டுகின்றன வல்லவா.

● ●

செல்வி காஞ்சனா சேனாதிராசா
புத்தூர்

கே; மகுடியாரே... எனக்கு ஒரு சிறு உபதேசம் கூறும்.

ப: தெய்வத்தைப் பகைக்கவும் கூடாது சாராயத்தை நேசிக்கவும் கூடாது... இரண்டும் நின்றறுக்கும்.

● ●

சி, லோகேந்திரன் பளை

கே: ஆரோக்கியமாக இருக்க ஒரு இரகசியம் கூறும் மகுடியாரே.

ப: Drink more மோர் for Health.

க, மணிவண்ணன் பரந்தன்

கே; தண்ணி இறைக்கும் யந்திரம் வாங்குவதற்குப்பணம் கொடுக்கத் தந்தை மறுத்ததால் மகன் தற்கொலை செய்ததாக ஒருசெய்தி கேள்விப்பட்டேன். அந்த மைந்தன் பற்றி உங்கள் கருத்து.

ப: யந்திரம் மிக்க மந்திரமில்லையென்று எண்ணிய தனையன்.

● ●

வே. இந்திரராஜன் பழையமுறி
கண்டி

கே: இறைவனுக்கு ஆராத்திகாட்டும்போது இடித்து விழுத்திவிட்டு முன் செல்பவர்களைப் பற்றி உமது கருத்து என்ன?

ப: பஸ்ஸில் இடம்பிடிப்பது போல்மோட்சத்திலும் இடம் பிடிப்பதற்கு முந்துகின்றார்கள்போலும்.

● ●

ப. தங்கவடிவேல் மல்லாகம்

கே: காதலுக்கும் கல்விக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

ப: இரண்டும் பரீட்சை நிறைந்தது.

● ●

அ. ஞானவிநாயகன் ஆவரங்கால்

கே: திருவிழாவிற்கும் திருமண விழாவிற்கும் உள்ள ஒற்றுமை என்ன?

ப: இரண்டும் கொடிஏறி ஆரம்பமாகின்றது.

சிவசங்கரி தேவதாஸ் வவுனியா

கே: பரீட்சை என்பது என்ன?

ப: படித்தவனுக்கு படிக்கல் படிக்காதவனுக்குத் தடைக்கல்

● ●

ச. பரமகுரு ஆவரங்கால்

கே: குடிகாரன் வீட்டு எருமை குடிகாரனைப் பற்றி என்ன நினைக்கும்,

ப: தனது எஜமானும் தன்னைப் போல் தண்ணிகண்ட இடத்தில் விழுந்து கிடப்பவர் என நினைக்கும்,

● ●

சிவா. கணபதி சிறுப்பிட்டி

கே: கடன் கொடுப்பவனுக்கும் கடன் வாங்குபவர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: கடன் கொடுத்தவன் வட்டி எனும் கனிபறித்துச் சுவைக்கின்றான், கடன் பட்டவன் உக்கி அழிகின்றான்.

● ●

கருணாநிதி மட்டக்களப்பு

கே: கியூவரிசை ஒழுங்கு தெரியாதவர்கள் நம்மவர்கள் என்கிறேன்

ப: தப்பு...பந்தி வரிசையில் ஒழுங்கைக் கடைப்பிடிப்பவர்கள்

● ●

ப. தனபாலசிங்கம் அச்சுவேலி

கே; தொழிலாளியின் பிரார்த்தனை என்ன?

ப: கறவா வரம் தாரும் பெம்மானே என்பதுதான்.

★ ●

சி, ஞானசீலன் வேலணை

கே: நண்பர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

ப: தீபாவளி பொங்கலுக்கு பத்திரங்கள் அனுப்பி வாழ்த்துவதோடு நிற்காது மணிஓடர் காசோலைப் பத்திரங்களும் அனுப்பி வாழவைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. பரந்தாமன் மன்னூர்

கே: கலைஞன் மனைவி கணவன் கலைஞானத்தில் இன்பம் காண்பாளா?

ப: உலைஞானமும் வேண்டும் என இறைவனை வேண்டுவாள்.

● ●

த. ராகுலதாஸ் மாதகல்

கே: ஓய்வில்லாதது எது?

ப: கடல் அலையும், கட்டியமனைவியின் நாவும்.

● ●

ப. தணிகாசலம் வேலணை

கே; சரண்சிங் இன்று பாரதப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார் மகுடியார் வாழ்த்து அனுப்பவில்லையா?

ப: சரண்சிங் சரணடையாச் சிங்கமாக ஆட்சிபுரிய வேண்டுமென்று மனதால் வாழ்த்தியுள்ளேன்.

● ●

ம. கலாநிதி அச்சுவேலி

கே: தமிழ்திரை உலகில் உம்மைக் கவர்ந்தவை எவை?

ப; பாகவதரின் பாடல்கள் என் எஸ் கேயின் நகைச்சுவை சிவாஜி கணேசனின் நடிப்பு.

● ●

ஜனூபா வஹாப்-கஞவாஞ்சிக்குடி

கே: தமிழக சஞ்சிகைகளின் இறக்குமதியால் சிரித்திரன் பாதிக்கப் பட்டுள்ளதா?

ப: மகுடியார் மௌனம் சாதிக்கிறார்— எழுத்தாளர் மாத்தளை சோமு பதிலளிக்கிறார். ''தமிழக சஞ்சிகைகளின் ராட்சத படையெடுப்புக்கு மத்தியில் சிரித்திரனை திங்கள் தோறும் நடத்தி வருவது போற்றுதற்குரியது, பாராட்டிற்குரியது, தொடரட்டும் தங்கள் பணி...''

செல்வி தவமணிதேவி சதாசிவம்

கே: உலகில் உயர்ந்த சந்தோஷம் நோபல்பரிசு பெறுவதுதான் என்கிறேன்.

ப: அப்போ நோபல் பரிசுபெற்ற ஏர்னெஸ்ட் ஹெமிங்வே சந்தோஷ மீதியாலா தனது உயிரை மாய்த்துக் கொண்டார்.

● ●

க. கனகசுந்தரம் மட்டுநகர்

கே: முதலாளி எதை விரும்புவார் எதை விரும்பமாட்டார்.

ப; தொழிலாளி விழித்திருப்பதை விரும்புவார்... விழித்தெழுவதை விரும்பமாட்டார்.

● ●

அ. முஸம்மில் ஏறுவூர்

கே: மிருகங்களுக்கு சிந்திக்கத் தெரியாது. மனிதனுக்கு சிந்திக்கத் தெரியும் - அப்படித்தானே.

ப: சிந்திக்கத் தெரிந்த படியால் தானே மனிதன் தற்கொலை செய்கிறான்.

● ●

இ. பவளமணி இணுவில்

கே: பெண்களின் நிர்வாணத்தைப்பற்றி எழுதிப் பணம் குவிக்கும் எழுத்தாளன் எப்படிப்பட்டவன்?

ப: மானத்தை வாங்கிப் பணம் வாங்குபவன்

★ ★

ம. திருப்பதி பதுளை

கே: உலகில் பயங்கரமானது எது

ப: பசி-பசியின் பயத்தினால்தானே சர்க்கஸ்காரன் சிங்கத்தின் வாயில் தலையை வைக்கிறான்

★ ★

கே. கிருஷ்ணவேணி மல்லாகம்

கே: எமது தமிழ்ப் பெண்களின் பொழுது போக்கென்ன?

ப: பேரம்பேசி நேரம் போக்குவது.

தி. ப்ரியமதி நுணுவில்

கே: விஞ்ஞானம் என்ன செய்தது அஞ்ஞானம் என்ன செய்தது?

ப: விஞ்ஞானம் மதியை எட்டிப் பிடித்தது, அஞ்ஞானம் விதியை எண்ணி துடிக்குது.

★ ★

சி, செல்வக்குமார் பரந்தன்

கே: இடிஅமின் பற்றி உமது கருத்து?

ப: ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணியின் வாரிசு.

★ ★

த. பரமகுரு கொக்குவில்

கே: பெண்ணின் உள்ளத்தை நேசியாது உடலை நேசித்துத் திருமணம் செய்தவன் எப்படிப்பட்டவனாக இருக்கலாம்.

ப: ஸ்கூட்டர் குலுக்காமல் இருப்பதற்குப் பின்னுக்கு ஒரு பாரம் தேவையென்று திருமணம் செய்தவனாக இருக்கலாம்,

★ ★

க, கனகராஜா அல்வாய்

கே: கராட்டி வீரர்கள் பற்றிஉமது கருத்து,

ப: ஆண்டவன் ஆறடி உயரத்தில் வைத்த மூளையைக் காலடியில் வைத்திருப்பவர்கள்,

☐ ☐

க. தனராஜன் கரவெட்டி

கே: மனிதன் வாழ்க்கை போராட்டமாக இருப்பதற்குக் காரணம் என்ன?

ப: மனிதனின் ஆரம்பமே போராட்டம்தான்' கர்ப்பப் பையில் இருந்து போராடியல்லவா பிறவி எடுத்தவன்.

● ●

☐ தரமான கேள்விக்கு ஆறு மாத 'சிரித்திரன்' அனுப்பிவைக்கப்படும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A. K. Selvanayagam.
## Television Technology Institute.

- தொலைக்காட்சிக் கருவிகளின் இயக்கம்—பராமரிப்பு—பழுது பார்த்தல் போன்றவற்றின் பூரண பயிற்சி.
- வர்ணத் தொலைக்காட்சி பற்றிய பூரணத்துவமான பாடங்கள்.
- சிற்றி அன்ட் கில்ஸ் (லண்டன்) [City & Guilds (Lond)] பரீட்சை எடுப்பவர்களுக்கான விசேட ஒழுங்குகள்.
- ஆவணியில் ஆரம்பமாகி நடைபெறுகிறது.
- அடுத்த மாணவர் தொகுதிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

**ஆ. க. செல்வநாயகம்**
**தொலைக்காட்சி, தொழில்நுட்ப**
**கல்வி நிலையம்.**

☐ விபரங்களுக்கு:

**97, கஸ்தூரியார் வீதி**
**யாழ்ப்பாணம்.**

---

சகலவிதமான சாய்ப்புச் சாமான்களுக்கும்

விளைபொருட்களுக்கும்

வருகை தாருங்கள்

**வி. எஸ். மார்க்கண்டு**

மெயின் வீதி,
பருத்தித்துறை.

---

உங்கள் பலசரக்குத் தேவை எதற்கும்

விஜயம் செய்யுங்கள்

## சிவகுமார் ஸ்ரோர்ஸ்

282, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

---

**Space Donated by a Well Wisher**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியச்சிமிழ்

அருளாங்கன்

''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' என்ருர் தமிழ் மூதாட்டி ஔவையார். தமிழ்மறை தந்த வள்ளுவரோ எழுத்தைவிட எண்ணையே பெரிதாக மதித்து ''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு'' என்ருர். இங்கு எழுத்துக்களைச் சொல்லும் போது ஏனே தானே என்றரீதியில் ஏனை எழுத்தென்ப எனக்கூறி எண்ணின் முக்கியத்தைத் தெளிவாக்கினர்.

சிரித்திரன் ஆசிரியர் அவர்களோடு ஒருமுறை நான் உரையாடும்போது அவர் கூறினர் ''தமிழன் கணக்குப் போட்டு வாழ்ந்தவன். முனிவர்கள் கூட உருத்திராட்சக் கொட்டையை எண்ணிக்கொண்டு தியானத்தில் இருக்கிருர்கள் சங்கீதம் பாடும்போது கூட கைவிரல்களை எண்ணுவதைக் காணலாம்.'' என்ருர் நகைச் சுவையாக. அதுமட்டுமன்றி தமிழிலுள்ள பல நூல்களுக்கு எண்களின் பெயர்களே உண்டு என்றும் கூறினர். அதன் தாக்கமே இந்த இலக்கியச்சிமிழ்.

உண்மைதான் தமிழிலுள்ள பதினெண்கீழ்க் கணக்கிலே நாலடி, நான்மணி, நானூற்பது, ஐந்திணை முப்பால், என்பனவும் கம்பர் பாடிய ஏர் எழுபது ஒட்டக்கூத்தரின் ஈட்டி எழுபது மற்றும் புறநானூறு அகநானூறு இன்ன நாற்பது இனியவை நாற்பது முத்தொள்ளாயிரம் பதிற்றுப்பத்து... இப்படிப்பல நூல்கள் எண்களின் பெயர்களுடன் இருக்கின்றன.

எண்களில் பெயர் சம்பந்தமாக எழுதுவதாயின் அது மிகப் பெரிதாக விரிவடைந்துவிடும் என்பதால் இலக்கியத்தில் பெருக்கல் வாய்ப்பாடு மட்டுமே இந்தக் கட்டுரையில் எடுத்தாளப் படுகிறது.

கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணத்தில் 'மூவிரு முகங்கள் போற்றி.' 'ஆறிரு தடந்தோள் வாழ்க' என ஆறு முகத்தையும் பன்னிரு தோள்களையும் பாடுகிருர் கம்பரும் கணித வாய்ப்பாட்டைக் கைவிடவிளலை. இராமரைப் பதினன்கு வருடம் காட்டுக்குப் போகும்படி கூறும் கைகேயி ''ஏழிரண்டாண்டில் வாவென்று இயம்பினன் அரசன் என்ருள்.'' என்கிருர்.

அதுமட்டு மின்றி கும்பகர்ணன் சாப்பிடும் உணவு பற்றிக் கூறும்போது

''ஆறுநூறு சகடத் தடிசிலும்
நூறு நூறு குடங் கள்ளும் நுங்கினன்''

என்று அறுநூறு வண்டில் சோறும் பத்தாயிரங் குடங் கள்ளும் உண்டதைக் குறிப்பிடுகிருர் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

வசைபாடும் காளமேகம் முருகனுக்கும், விநாயகருக்கும் சிலேடையாகப் பாடும்போது

சென்னிமுக மாறுளதால் சேர்கர முன்னாலு கையால்

எனப்பாடினர். முருகனுக்கு மூன்னாலு, பன்னிரண்டு கைகள் விநாயகருக்கோ முன்னால் தூங்கும் கை. என்பது இதன்பொருள்.

வெண்பாவிற் புகழேந்தி எனப் புகழப்படும் ~~புகழ்ப்படும்~~ புகழேந்தியாரும் தமயந்தியின் இரண்டாவது சுயம் வரத்துக்கு செல்லும் நளன் தேர் செலுத்திய வேகத்தைச் சொல்லும்போது.

''மேலாடை வீழ்ந்தது எடுஎன்ருன் அவ்வளவின்
நாலாறு காதம் நடந்ததே....''


என்ருர்

இருபத்தினலு காதம் என்ருல் இருநூற்றி நாற்பது மைல்கள். அரசன் தனது அங்க வஸ்திரம் விழுந்து விட்டது எடு என்று கூறற்கிடையில் இருநூற்றி நாற்பது மைல்கள் கடந்துவிட்டதாம் தேர்.

இளங்கோ வடிகளும் தமது சிலப்பதிகாரத்திலே, நடந்து களைத்த கண்ணகி கோவலனிடம் மதுரை மூதூர் இன்னும் எவ்வளவு தூரம் என்று கேட்க ஆறு ஐந்து காதம்'' என்று கோவலன் கூறுவதாகக் கூறுகிருர். பட்டினத் தடிகளும் ''ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்று'' என்ருர்.

இப்படியே எழுதினல் எனது கட்டுரையும் கணக்குப்போட்டு எழுதாத ஒன்ருகமாறி விடயத்துக்கு மாசு ஏற்படுத்திவிடும் என்பதால் இத்தோடு என் கணக்கை முடிக்கிறேன்.

---



● நீ முன்பு கூட்டித் திரிந்த கேர்ள் பிரெண்டைத் தானேகல்யாணம் பண்ணிஞய்.

☐ ஓம்..அன்று அவள் 'கேள்' இன்றே தேள்.

---

● கல்யாணத் தரகர் பேசாத கல்யாணம்

★ யார் பேசியது?

● திருவாளர் தொலைபேசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்திரு

ஒரு: இந்த ஸ்கைலாப்பும் அரசாங்க ஊழியர்கள் போல அந்தரத்தில் திரிகிறது.

மற்; எப்படி?

ஒரு: எழுபத்தி நாலாம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்பினார்கள். அங்கே ஐந்து வருடம் பூர்த்தியானதும் இடமாற்றம் பெற்றுப் புறப்பட்டு விட்டது.

---



பாட்டி: ரொஞ்சநாளா வீதிவலம் வருகுது என்று ரேடியோவில் வர்ணனை நடந்ததிரு விழா தீர்த்தக்குளிப்போடு முடிஞ்சு போச்சு.

பேரன்: எந்தக்கோவில் திருவிழா பாட்டி?

பாட்டி: கோவிலில்லை. ஸ்கைலாப் வீதிவலம் வந்து இந்து சமுத்திரத்திலே இறங்கி தீர்த்தமாடினதோடு முடிஞ்சு போச்சு.

---

சமீபத்தில் ஸ்கைலாப் விழும் வர்ணனை வானொலியில் நடந்து கொண்டிருந்தது. வளிமண்டலத்தில் இன்னும் பிரவேசிக்கவில்லையா என பேட்டியில் கேட்கப்பட்டபோது மற்றவர் கூறியது. வளிமண்டலத்தில் இன்னும் அது பிரசவிக்கவில்லை.

ஒரு: ரொம்ப நாளாக மேலே சுற்றியபடி இருந்துவிட்டு இப்போ கீழேவிழுந்து இரண்டு பேரைக்காயப்படுத்தி விட்டது.

மற்: என்னது, ஸ்கைலாப்பா?

ஒரு: இல்லை. எங்கள் ஊரிலுள்ள தியேட்டரின் மின்விசிறி.

---

ஒரு: இந்தியாவைச் சுற்றிப்பார்க்க வந்த மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த இருபத்தேழு வயதான உல்லாசப்பயணப் பெண்மணி ராஜஸ்தானில் கூலிக்கமர்த்திச்சென்றரிக்ஷா இளைஞரைக் கண்டதும் காதலித்து திருமணம் செய்ததுடன் சீதா என்று தன்பெயரையும் மாற்றிக்கொண்டார்

மற்; சரிதான் வாழ்நாள் பூராவும் அந்த ரிக்ஷாக்காரர் அவளை வாழ்க்கை ரதத்திலும் இனி இழுத்தாக வேண்டும்,


---

ஒரு! அவர் ஞானோபதேசம்கேட்டு அதன்படி நடப்பவர்.

மற்: எந்தக் குருவிடமிருந்து கேட்டவர்?

ஒரு: குருவிடமில்லை. அவரது மனைவி பெயர் ஞானம் அவவிடமிருந்து.

---



● உங்க மகனுக்கு ஏன் ஸ்கைலாப் என்று பெயர் வைத்திருக்கிறீர்கள்?

□ ஸ்கைலாப் பூமிக்கு வந்த அன்றுதான் இவனும் பூமிக்கு வந்தான்.



காதலி: நான் உங்களுக்கு எழுதிய காதல் கடிதம் அப்பாவின் கையில் சிக்கிவிட்டது இப்போ உங்களிடம் ஸ்கைலாப் வேகத்தில் அப்பா வந்து கொண்டிருக்கிறார்

---

தனது தாயுடன் கோவிலுக்குப் போய் பிரசங்கம், கேட்டு விட்டு வந்தமகன் தாயிடம் அம்மா முருகன் தகப்பனுக்கு உபதேசம் செய்து தகப்பன் சாமி என்று பெயர் பெற்றதாகச்சொன்னார்களே. நானும் ஏதாவது அப்பாவுக்குச் சொன்னால் எனக்கா உபதேசம் பண்ணுகிறாய் என்று அடிக்கிறாரே.

---

மண்ணாசை என்பது நம்ம ராமசாமிக்கு இப்போஅறவே இல்லை.

மற்: என்னப்பா? அவர் தான்மாடி வீடு கட்டுகிறாரே.

ஒரு: அதுதான் நானும் சொன்னேன். மண்வீடுகட்டி வாழ்ந்த அவர் இனி மண்ணால் வீடுகட்டமாட்டாராம்.

---

● இந்த ஸ்கைலாப் மூன்று ரயில் பெட்டிகளின் எடையைக் கொண்டதாம்.

□ அதுசரி. நம்ம ரயில்வேயைப் போலிராமல் சொன்ன நேரத்துக்கு பூமிக்கு வந்து விட்டதே.

**ச. ரா. பா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனைச்சிந்து

தமது—
வீட்டு மேசையின்
அம்மணத்தை—
அலங்காரத் துணியால்
மூடி,
மானங்காக்கும்
பணக்காரர்—
தமது நாட்டு
ஏழைகளின்
நிர்வாணத்தை
காக்க விரும்புவதில்லை.

▣

சிம்மாசனத்தில்
இருந்த
ராமபிரானின் பாதுகை
சொன்னது
''நான் உத்தமனின்
காலடியில்
இருந்த படியால்
இன்று
உயர்ந்த இடத்தில்
இருக்கிறேன்.

—வர்மன்

பிச்சைக்காரன்: ஐயா... சாமி... நாலுநாளாய் சாப்பிடவில்லை சாமி...

வேலைக்காரன்: உஸ் சத்தம் போடாமல் போ. ஐயா பலாப்பழம் சாப்பிடத்தேன் வாங்கி வைக்கவில்லையென்று நெருப்பெடுக்கிறார்.

கடன்பட்டவன்: கம்பன் ஒருமுட்டாள்...கடன்பட்ட நெஞ்சம் எங்கே ஐயா கலங்குது...

கடன்கொடுத்தவர்; ! ! !

—ஜோக்கிரட்டீஸ்

☐ இந்த எண்ணெய் விற்கிற விலையில் நம்ம செல்லமொண்டு மண்ணெண்ணை குடித்திட்டு ஆஸ்பத்திரியில் கிடக்குது.

● எங்கமகளுக்கு கிழக்குத்திசை பொருத்தமானது... வீடு கிழக்கு வாசல் மாப்பிளை மத்திய கிழக்கில் வேலை.



☐ உப்பு... சீனி... இரண்டிலும் வேகமாகத் தண்ணியில் கரைவது எது?

● சீதனம்... எல்லாவற்றிலும் வேகமாகத் தண்ணியில் கரையும்.

—ஜோக்கிரட்டீஸ்

ஆசிரியர்: நீர் உயர நெல்உயரும்.

மாணவன்: எண்ணை விலைஉயர கார்விலை இறங்கும் சார்.

—அதிமதுரம்

''ஏண்டி விமலா...நீ மாலாவுடன் கோபமா?''

''தரத்தில் குறைந்தவர்களுடன் என்ன பேச்சு வேண்டியிருக்கு...

''மாலா எப்படிக் குறைந்தவள் அவள் கணவனும் உன் கணவனும் பள்ளிக்கூட ஆசிரியர்கள் தானே.

''அவளின் கணவன் ஆகப் பள்ளிக்கூடத்தில் மட்டும் படிப்பிக்கிறவர், என்னுடையவர் பள்ளிக்கூடத்திலும் ரியூட்டரியிலும் படிப்பிக்கிறார்.

—அதிமதுரம்



தெய்வம்: பத்தா உன் பக்தியை மெச்சினோம் நீ... வேண்டும் வரம் யாதோ...

மனிதன்: அடுத்த பிறவியில்நான் மாடாய் பிறவி எடுக்கவேண்டும்...

தெய்வம்: என்னவிபரீதம்...மானிடனாய்ப் பிறவியை வெறுத்து மாட்டுப்பிறவியா?

மனிதன்: கொடிதுகொடிது மானிடனாய்ப் பிறத்தல் கொடிது அரிது அரிது மாடாய்ப்பிறத்தல் அரிது.

தெய்வம்: ஏன் மனிதா?

மனிதன்: மனிதனின் குடும்பக்கட்டுப்பாட்டையும், ஆடு மாடுகளின் அபிவிருத்தியையுமல்லவா உலகம் விரும்புகின்றது

தெய்வம்: ? ? ! !

கூந்தல் கறுப்பு — குங்குமம் சிவப்பு என்று கண்டு பிடித்துப் பாடியவனுக்கு 2000ரூபா கொடுகிறார்கள். இதற்கு 50, 60 வாத்தியம் வைத்து டியுன் போடுகின்றார்கள் இதற்கு இரண்டரை லட்சம் ரூபா செலவழித்து அவுட்டோர் சூட்டிங் செய்கிறார்கள்.

—டாக்டர் ஆறு அழகப்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஔவையார்' படத்தை பல ஆண்டுகளுக்கு முன்னர் பார்த்து ரசித்த என்னை 'நந்தி' அவர்கள் ஈழநாட்டில் எழுதிய விமர்சனம் மீண்டும் பார்க்கத் தூண்டியது.

வெலிங்டன் தியேட்டருக்கு விரைந்தேன்.

'ஹவுஸ்புல்'—அறிவிப்புப் பலகை அங்கு தொங்கிக் கொண்டிருந்தது.

நான் கவலைப்படவில்லை. ஆனந்தக் கண்ணீர் வடித்தேன். பலவிரசம் வழிந்தோடும் படங்களைத் தவிர்த்து ஒரு மூதாட்டி ஞானப்பழத்தைப் பிழிந்து தரும் படத்தைப் பார்க்க முண்டியடித்து வந்து தியேட்டரை நிரப்பி விட்டார்களே என நினைத்து பேரானந்தமடைந்தேன் வாழ்க எமது மக்களின் ரசஞானம்.

—0——00———000

கோவிந்தன் குழலோசை கேட்டு நெக்குருகி நின்றார்களாம் கோபியர்கள் அன்று.

இன்று கோவிந்தராஜனின் குரல்கேட்டு குழைகின்றார்கள் எமதுமக்கள்.

திருவிழா, திருமணவிழா எதுவானாலும் எங்கும் சீர்காழி கோவிந்தராஜனின் கானவெள்ளம் தான் ஒலிபெருக்கியினூடாக ஓங்காரமாக ஒலிக்கிறது.

பொப்பிசை எமது திசையை மாற்றிவிடுமோ என்று பயந்திருந்தோம் சீர்காழியின் சங்கீதம் அந்த பயத்தை போக்கிவிட்டது.

———0000————00000

பாட்டுக்கள் ஒலிப்பதிவு நாடாவில் பதிவுசெய்வதற்காக 'விக்ரர் அன் சன்ஸ்' ஸ்தாபனத்திற்குச் சென்றிருந்தேன்.

அது ஒரு கலைஞர் மன்றமோ எனத் தடுமாறினேன்

நம்நாட்டுக்கலைஞர்களான தவில்வித்துவான் கணேசன், சின்னராஜா, நடிகமாமணி வைரமுத்து, நகைச்சுவை நடிகர் ராம்தாஸ் எல்லாருடைய படங்களும் தரிசனத்திற்கு வைக்கப்பட்டிருந்தது அங்கு.

நம்நாட்டுக் கலைஞரைக் கௌரவிக்க ஒரு ஜீவன் இருக்கிறதே என்று விக்ரர் அன் சன்ஸ் ஸ்தாபனத்தின் உரிமையாளரை மானசீகமாக வாழ்த்தினேன்.

—————000000———————000c000

எமது சித்திரன் மகுடியார் விசித்திரமாகச் சிந்திக்கும் பலே பேர்வழி

ஒருசமயம் அவரை 'நீர் எதில் அழகைக் காண்கிறீர்'' எனக்கேட்டேன்.

அவர், ''அழகைக் காகத்தின் அலகில் காண்கிறேன்'' என்றார்.

''என்ன காகத்தின் அலகிலா?'' எனச் சினந்தேன்

அவர் சிரித்துவிட்டு, காகம் தனது பொன் குஞ்சுக்கு ஆயாவைச் சம்பளத்திற்கு வைத்து உணவூட்டுவதில்லையே'' என்றார்.

நான் பம்பாயில் ஒருஹோட்டலில் தங்கியிருந்த போது எனது பக்கத்து அறையில் இருந்த கணவன் மனைவி பேச்சு என்காதில் விழுந்தது.

''இலங்கை மக்களுக்கு 'டீ' டைம் என்று ஒருநேரம் கிடையாது எல்லா நேரமும் 'டீ' குடித்துக் கொண்டேயிருப்பார்களாம்.'' என்றாள் மனைவி.

அதற்குக் கணவன் 'Any time in Ceylon is tea time' என்ற ஒரு வாசகமே இருக்கு... உண்மையாக இருக்கலாம் என்றார் கணவர்.

அவர்கள் பேசியது முழுக்க உண்மையே... இங்குள்ள வீடுகளுக்கு சும்மா போனால் காணும்.

'ரீ' குடித்துவிட்டுப் போங்கள் என்பார்கள்; இப்பதான் சாப்பிட்டனான் என்று ஏதாவது சாட்டுச் சொன்னாலும் விடமாட்டார்கள்; ''அதுக்கென்ன பரவாயில்லை; அதுசெமிக்கப்பண்ணும் குடியுங்கள் என்று வில்லங்கமாகவே திணிப்பார்கள்.

'டயபிற்றீஸ்' என்று சொன்னாலும், ''ஒருநாளைக்கு குடித்தால் அதொன்றும் செய்யாது'' என்றுசொல்லி விடுவார்கள்.

ஹோட்டல்களுக்கு எந்நேரமும் போனாலும் 'மூன்று ரீ... இரண்டு ரீ... ''என்று இடைவிடாது ஓடர் கொடுக்கும் ஒலியும், தேநீர் கலக்குபவனின் ஒலியும், இணைந்து இரைந்து கொண்டேயிருக்கும்.

# ராகமாலிகை

## -நாதீயன்

அரசாங்க அலுவலகங்களுக்குப் போங்கள், அலுவலர்கள் எல்லாரும் மாறிமாறி 'கான்ரீனை'யே மொய்த்துக் கொண்டிருப்பார்கள், ரீ குடித்துக்கொண்டிருப்பார்கள். 'ரீ'குடிப்பதற்குத்தான் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறார்களோ'' என்று நினைக்கத்தோன்றும்.

——————0000000————————O

யாழ்ப்பாண மண்ணில் ஓவியக்கண்காட்சி சாலையில்லையென அறிந்த அமெரிக்கர் என்ன கூறினார் தெரியுமா?

''கலாயோகி ஆனந்தக் குமாரசாமியை உலகிற்குத் தந்த பெரியோர்கள் வாழும் மண்ணிலா கலைக்கூடம் இல்லை. வியப்பாக இருக்கிறதே எனக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதவாதம்

டங் என்ற நாதத்தைக்கேட்டு அருகே இருந்த தவில் வாத்தியம் திரும்பிப்பார்த்தது. அருகே இருந்த மிருதங்கம் தான் அப்படிச் சப்தித்தது. தவில் அதைப்பார்த்துக் கேட்டது. 'ஏனப்பா சத்தம் போட்டாய்' எனவும் மிருதங்கம் பெருமையுடன் என்னைப்பற்றி நினைத்து சந்தோஷப்பட்டேன் என்றது. அப்படி என்ன சந்தோஷம் என்றது தவில் ''உன்னைவிட எனக்குத்தான் மதிப்பு அதிகம். எத்தனையோ கச்சேரிகளில் என்திறமையைப் பார்த்து மக்கள் சந்தோஷப்பட்டனர். என் உடலை மூடி வண்ணத்துணிகள். உனக்கோ காவிவஸ்திரம். என்னைப் பாவிக்கு முன்பு மாப்போட்டு என்னைப்பதப் படுத்துகிறார் என் எசமான் அதுமட்டுமா எத்தனையோ பெண்களை நாட்டிய மேடைகளில் அரங்கேற்றம் செய்திருக்கிறேன். என் எசமான் அழகிய பெண்களின் நாட்டியக் கச்சேரி சங்கீதக் கச்சேரி இதற்கே என்னை எடுத்துப்போவார். நீ வீதிகளில் உச்சி வெயிலிலும் கொட்டும் பனியிலும் ஊர்வலங்களில் திரியவேண்டும். என்க்கு என்று ஒரு சபா, எனக்கு என்று ஒருபாணி. என் எஜமான் உனது எஜமான் போலத்தடி யெடுத்து வாங்கு என்று வாங்கமாட்டார். போதாததுக்கு விரல்களில் கூடுகளால் உன்னை வெளுக்கிறார். என்னைத்தன் சுயவிரல்களால்தான் பாவிப்பார். உலகையே படைத்துக்காக்கும் இறைவனே என் நாதத்தில் லயித்து ஆடுகிறார். இறைவன் ஆடும்பொழுது எனது வாத்தியத்தின் ஒலியிலிருந்தே ஸ்வரங்கள் உற்பத்தியானது. எனது ஒலியிலிருந்தே உயிரெழுத்துக்கள் பிறந்தன. என்னிடமிருந்து பிறந்த ஒலியில் இருந்தே பாணினி பதஞ்சலி, வியாக்ரபாதர் என்பவர் இலக்கண சூத்திரங்களை இயற்றினார்கள். உலகப்பிரளயத்தில் கூட இறைவன் என் ஒலிக்கே தாண்டவமாடுகிறான். நந்திதேவர் என்னையே பாவிக்கிறார். இனிமையான ரீங்காரநாதம் என் ஒலி. உன் ஒலியோ அப்பப்பா நீ மேடைக்கு வந்ததும் மைக்கைத் தூக்கித் தொலைவில் வைக்கிறார்கள். கர்ணகடூரம்' என்று மிருதங்கம் தன் நாதத்தைப் பற்றிப் பெருமையடித்தது. தவிலுக்கு உள்ளூரக்கோபம் வந்துவிட்டது. வெளியே காட்டாமல் உன்னைவிட எனக்குத்தான் கௌரவம் அதிகம். எனது பெயரே மங்கள வாத்தியம். காலையில் மங்கள இசை என்று என் நாதத்தைத்தான் கேட்கிறார்கள். ஒருவீட்டில் சுபகாரியம் என்றால் உன்னையா தேடுகிறார்கள். என் ஒலி கேட்டதும் ஊரே சந்தோஷத்தில் திளைக்கும். உன்னை உன் எசமான் எப்படி உபயோகிக்கிறார்? தனது முழங்காலைத் தூக்கி அதன்கீழ் உன்னைவைத்து நசித்துக்கொண்டு குத்தித் தள்ளுகிறார். என்னைக்கையாள்பவர் அன்புடன் என்னைத் தன்மடியில் தூக்கிவைத்து நாதமெழுப்புவார். ஊர்வலத்திலும் என்னைத் தூக்கிச்செல்வார். சலசலவென்று சலங்கை என்மேல் ஒலிக்கும்படி கட்டியிருக்கிறார். என்னை வணங்கியே கச்சேரிகள் செய்வார். தாலி கழுத்தில் ஏறினால் கெட்டிமேளம் என்று கூப்பிட்டு மகிழ்வார்கள். உன்னையா கூப்பிடுவார்கள்? எனவே இறைவனால் ஆக்கப்பட்ட மக்களின் மங்கல வாழ்வுக்கும் அவர்கள் வீட்டில் நடக்கும் சுபகாரியங்களுக்கும் பிரபஞ்ச உற்பத்திக்கும் நானேதான் இயங்குகிறேன். என்றது. மிருதங்கமும் ஆமாம் நீ சொல்வதும் சரிதான் என்று ஆமோதித்து மௌனமாகியது.

---

## மனிதர்கள்

ஒருவன் தன்சாதிப் பெருமையைப் புகழ்ந்து மற்றைய சாதிகளை இழித்துப் பேசினான்.

மற்றவன் தன்மொழிப்பெருமையைப் புகழ்ந்து மற்றைய மொழியை தாழ்த்தினான்.

மூன்றாமவன் தன் 'மத'ப்பற்றை வெறியுடன் மற்றைய மதங்களை தாக்குவதன்மூலம் நிலை நிறுத்தினான்.


இப்படி மூவரும் சண்டையிட்டுக் கொள்கையில் ஒருவன் எழுந்து—

''அமைதி... அமைதி..., சாதி..., மதம்... மொழியெல்லாம் மனிதகுல நன்மைக்குப் பங்கமாதல் கூடாது... இந்த கூச்சல் சண்டையெல்லாம் விட்டு நீங்கள் ஒற்றுமையாக இருந்தால் எவ்வளவோ சாதிக்கலாம்...' என்றான்.

மூவரும் ஒருவரையொருவர் பார்த்தனர்—

பின் மூவரும் ஒற்றுமையாக அந்த நான்காமவனை அடித்து ஒருமூலையில் போட்டுவிட்டு—

சண்டையைத் தொடர்ந்தனர்.



## காலி

கணவன்: உன்னுடையகாலி முகப்பவுடர் டின்கள் தான் நான்கண்ட மிச்சம்.

மனைவி: உங்களுடைய காலி மதுப்போத்தல்கள்தான் நான் கண்டமிச்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரேதா யுகத்தில் மரப்பால்

பாரதப் பெரும்போர் நிகழ்ந்தது 'திரேதா யுகத்தில் என்பார்கள் இப்போதோ துவாபரயுகம் முடிந்து கலியுகம் நடைபெறுகிறது. திரேதா யுகத்தில் மாப்பால் இருந்திருந்தால் அதிசயமில்லையா.

துரோணாச் சாரியாரும், துருபதராஜனும் இளம் வயதில் ஒன்றாகக் கல்விகற்கும் போது உயிர் நண்பர்களாயிருந்தனர். இளவரசனாயிருந்த துருபதன் தான் அரசனானதும் தனது இராய்ச்சியத்தில் பாதியை துரோணருக்குத் தருவதாக வாக்களித்திருந்தான்.

துரோணரின் மகன் அசுவத்தாமா சிறுவனாயிருக்கும்போது அவனுக்குக் கொடுக்க பசுப்பால் அவருக்குக் கிடைக்கவில்லை. மாப்பாலையே கொடுத்து வளர்த்தார். பின்னர் பசுமாடொன்று வேண்டி துருபதனிடம் சென்று கேட்டார். அரசனாயிருந்த துருபதன் துரோணரை அவமரியாதை செய்து அனுப்பினான்.

இது பாரதத்தில் வருகிறது. துரோணர் மகனுக்கு மாப்பால் கொடுத்தார் என்பதினை கீழே வரும்பாடல் தெரிவிக்கிறது.

மாவின் பாலேயன்றி மரபுக்குரிய மைந்தன்.
ஆவின் பால்கண் டறியாதைதனால் வருந்தியந்தக்
கோவின் பாலெய்துதலுங் கோமான் யார்நீ யென்ன
நாவின் பாலானடுங்கி நானுன் நண்பனென்றேன்.



## கோட்டை விட்டார்

மனைவி: எங்கள் மகன் இந்த முறையும் பரீட்சையில் பெயில்.

கணவன்: அப்ப அவனுக்கு ஒரு டியூட்டரியை ஆரம்பிச்சுக் கொடுப்பம்.

ஒரு: என்ன ஒளித்து நிக்கிறீங்கள் கடன் காரனுக்குப் பயந்தா?

மற்: அண்மையில் கல்யாணம் பண்ணியவங்களுக்கு ஒளித்துத்திரியிறேன், ஒரே சுபமுகூர்த்தத்தில் எல்லாரும் கல்யாணம் பண்ணினால் நான் எதற்கென்று போவது.

ஆசிரியர்: அடிமட்டம் என்பது என்ன?

சிறுவன்: முதுகு சொறிவதற்குப் பாவிக்கும் மட்டை சார்.



மனைவி: ஓடிப் போய் தலைக்குப் பூ வாங்கி வாங்க.

கணவன்: இந்தப் பிறவியில் கணவனைத் தலைக்குப் பூ வேணுமென்று கரைச்சல் பண்ணுபவள் அடுத்த பிறவியில் சேவலாக பிறவி எடுப்பாள்

—அதிமதுரம்


அழகுக் கலைக்கோலம் தரும்
அற்புதப் புடவைத் தினிசுகளுக்கு

ஒப்பற்ற இடம்
சிங்காரம்ஸ்

நங்கையர் நாடும் நவநாகரீக நகைகளுக்கு
டைமா நகைமாளிகை

செட்டியார் தெரு.
தொலைபேசி: 20875. கொழும்பு.



அதிக சுவைக்கு அண்ணா கோப்பியே!
அண்ணா கோப்பிக்கு நிகர்
அண்ணா கோப்பியே!!

அண்ணா கோப்பி
தொழிலகம்

இணுவில். தொலைபேசி: 7412

# குறுமணிகள்

- உலகக் கிண்ணத்திற்காக நடைபெற்ற பூர்வாங்கக் கிரிக்கட் போட்டிகளில் இலங்கை வெற்றிபெற்று இறுதிப் போட்டிகளில் பங்குபற்றும் தகைமை பெற்றுள்ளது. டென்மார்க்கிற்கு எதிராக நடந்த போட்டியில் 318 ஓட்டங்களைப்பெற்ற இலங்கைக் கோஷ்டி, பூர்வாங்க போட்டிகளில் ஆகக்கூடுதலான ஓட்டங்களைப் பெற்ற பெருமையையும் 12 லட்ச ரூபாய் பரிசையும் பெற்றுள்ளது.

- இலங்கை அவைகாற்றுக் கழகத்தின் சார்பில் பிரபல இயக்குனர் க, பாலேந்திராவின் நெறியாள்கையில் இந்திரா பார்த்தசாரதியின் ''மழை'' 'பனஸ்கோ'வின் இடைவெளி ஆகிய இருநாடகங்கள் 10-6-79 அன்று யாழ்-வீரசிங்கம் மண்டபத்தில் அரங்கேறின.

- இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி ராணுவவீரர்களின் 'ஆட்டோகிராப்' புத்தகத்தில் கையெழுத்துப் போடும்போது எழுதுவது 'விபத்துகளுக்கு நடுவில் வாழக்கற்றுக்கொள்'' என்பதாகும்

- கவிஞர் 'சுரதா' அவர்களின் 'சுரதா' என்றபெயருள் ஒலிந்திருப்பது என்ன தெரியுமா? சுப்புரத்தினதாசன் என்பது தான். அதாவது 'சுரதா'என்றால் 'பாரதிதாசனுக்கு தாசன்' என்பது தான் அதன் பொருள்.

- உலகில் முதல் முத்திரை 1840ல் பிரிட்டனில் வெளியிடப்பட்டது, ஆனால் பிரிட்டனின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

- ஆபிரிக்காவையும் ஆசியாவையும் இணைக்கும் ஒரே சொல் 'ஆரேஷியா' என்பதாகும் இதனை உருவாக்கியவர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள்.

- இலங்கையில் வெளியான முதல் தமிழ்ப் பத்திரிகையின்பெயர் 'உதயதாரகை'

- சகாரா பாலைவனத்தில் ஓராண்டு விழும் வெப்பத்தை மின்சக்தியாக மாற்றினால், உலகம்முழுதும் உள்ள நிலக்கரியை எரிப்பதன் மூலம் கிடைக்கும் சக்தியை விட பலஆயிரம் மடங்கு சக்திகிடைக்கும்.

- உலகில் மிகஅதிகமான மொழிகளில் ஒலிபரப்புச் சேவை நடத்தும் நிறுவனம் லண்டன் பி. பி. ஸி தான். இங்கு 40க்கு மேற்பட்ட மொழிகளில் ஒலிபரப்பு நடைபெறுகிறது.



## தண்டனை

காதலி: காதலுக்குத் தண்டனை திருமணம்

காதலன்; அப்போ திருமணத்துக்குத் தண்டனை?

காதலி: குடும்பக் கட்டுப்பாடு.

---

கணவன்: நீ எனக்குத் தாரமாக வந்தாயே அதுதான் எனக்குத் தலைவிதி

மனைவி: நீங்கள் மாணவர்களுக்குக் குருவாக இருக்கிறீர்களே... அது அவர்களின் தலைவிதி

ஒருவர்: நீங்கள் இந்த நாட்டின் பிரஜைகளாக இருக்கிறீர்களே அது இந்த நாட்டின் தலைவிதி.

# கடவுளும் மனிதனும்

ஒரு நல்லமனிதன் கடவுளைத்தேடிப் புறப்பட்டான்.

கடவுள் ஒரு மனிதனை, நல்லமனிதனைத் தேடிப்புறப்பட்டார்.

இருவரும் இடையில் சந்திக்க நேர்ந்தது.

கடவுளுக்கு அவனைக்கண்டதில் திருப்தி.

மனிதனுக்கு கடவுளென்று புரியவில்லை.

கடவுள் கேட்டார் ''நீ எங்கே போகிறாய்''

மனிதன் சொன்னான் கடவுளைத்தேடி... ஆமாம் நீங்கள் எங்கே போகிறீர்கள்'?

''நான் மனிதனைத்தேடிப் போகிறேன்' — இது கடவுள்

''நானும் மனிதன்தான்'' என்றான் மனிதன்

''நம்புகிறேன்... சந்தோஷம்... நான் யார் தெரியுமா?,
— என்றார் கடவுள்

''தெரியவில்லையே'' — இது மனிதன்

''நான் தான் நீ தேடிப்போகும் கடவுள்''—
என்றார் கடவுள்

''உனக்கு பைத்தியமா?... என்னை நம்பச் சொல்கிறாயா ...என்ற மனிதன் தொடர்ந்து தன் பயணத்தில் விரைந்தான்.

கடவுள் குமின் சிரிப்புடன் தன்னிருப்பிடம் நோக்கி விரைந்தார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்தில் நகைச்சுவை

சே. நா. தர்மராஜன்

நந்திக் கலம்பகத்தில் ஒரு பாடல் நமக்கெல்லாம் நகைச்சுவையை வழங்குகிறது. நந்திவர்மன் தன் காதல் மனையாளை விடுத்து பரத்தையின் வீட்டில் உறைகின்ருன். அக்காலத்தில் பரத்தையின் வீட்டிலிருக்கும் அரசனுக்கு மனங்குளிரும் வண்ணம் பாணன் ஒருவன் பாடிக்கொண்டிருப்பது வழக்கம். சில நாளில் பரத்தையை விடுத்து தன் மனையாளையும் மழலைச் செல்வத்தையும் காணவேண்டி வருகிருன் மன்னன்.

பரத்தைபால் பிரிந்த தன்மேல் அரசமாதேவி கோபமுறுவாள் என்றஞ்சிய அரசன், தனது பாணனை தன் தலைவியிடம் தூதுவிட்டு கோபத்தைத் தணிவிக்க முயலுகிருன்.

அரசமாதேவியிடம் சென்ற பாணன் அவளது கோபத்தைத் தணிவிக்க எண்ணி பசுந்தமிழில் பாடலிசைக்கிருன். இலக்கிய ஞானம் கைவரப்பெற்ற அரசிக்கு பாணனின் பாடல் வழமைக்குமாருக கோபத்தையே தருகிறது. தன் தலைவனின் தொழிலுக்கு இப்பாணன் துணைபோயினுன் என்பதால் அவனது பாடல் அவளுக்கு வேம்பாகிறது.

அவனது பாடலை நிறுத்தவும், அவனைப் பரிகாசம் செய்து அனுப்பவும் விரும்பிய அரசி சிந்திக்கிருள். பாணனைப் பரிகசிக்க எண்ணிப் பார்வேந்தனைப் பரிகசிக்கலாகாது என்று நினைந்து ஒருபாடல் பாடுகிருள்.

''உனதுபாடலை இசைஞானத்தை பெரிதாகஎண்ணி எனது மனதைமாற்ற வந்திருக்கிருயே. உனது இசையின் மகிமை என்ன தெரியுமா? நீ பரத்தையின் வீட்டு வாசலில் இருந்து பாடியதைக் கேட்ட என்தாய் 'காட்டில் பேயழுகின்றது என்ருள்.' மற்றையோரோ இல்லை 'நரி ஊளையிடுகின்றது' என்றனர். எனது தோழியோ 'இல்லை இல்லை நாய் குரைக்கிறது' என்ருள். உனது குரலை நன்ருக அறிந்தநான் உனது ஓசைதான் அது என்றேன்.'

என்று கூறி அவனைப் பரிகசிக்கிருள். இங்கு எங்கையர் என்பது அவளது தலைவனின் பரத்தையர் அவளுக்கு தங்கையாதல் முறைதானே.

ஈட்டு புகழ்நந்தி பாண! நீ எங்கையர்தம்
வீட்டிலிருந்து பாட விடிவளவும்—காட்டிலழும்
பேயென்ருள் அன்னை பிறர் நரியென் ருர்தோழி
நாயென்ருள் நீ யென்றேன் நான்.

இதன்பின்னும் பாணன் பாடிப்பாவையை ஆற்ற நினைப்பானு?

# எண்ணம்

ஒரு பையனைத் தந்தை கேட்டார்.

''தம்பி! மீன்கள் நீரிலே வாழ்வது உனக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லையா?''

பையன் சொன்னுன்:

''அது ஆச்சரியமில்லை அப்பா! தான் வாழ்ந்த நீரிலேயே அது கொதித்துக் குழம்பாகிறதே, அதுதான் ஆச்சரியம்!''

—கவிஞர் கண்ணதாசன்


மில்க்வைற் நீலசோப்




திருப்திகரமான சலவைக்கு
மில்க்வைற் நீலசோப் வாங்கி
உபயோகியுங்கள்.

100 மில்க்வைற் நீலசோப்
மேலுறைகளை அனுப்பி

மில்க்வைற் அப்பியாசக் கொப்பியை
அல்லது

அழகிய பொலித்தீன்பாக்கை
பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் யாழ்ப்பாணம்
தொலைபேசி 7233

கிளை:
79, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 12
தொலைபேசி: 36063

போட்டிச் சிறுகதை:

> சென்ற இதழில் அறிவித்த படி சிறுகதைப் போட்டிக் கதைகளை உங்கள் விமர்சனத்திற்காக பிரசுரிக்கின்றோம். உங்கள் விமர்சனத்தை 20-8-79 க்கு முன்பு அனுப்பிவையுங்கள்.
>
> நன்றி
>
> — ஆசிரியர்




என்னை ஆரெண்டு இவர்களுக்குத் தெரியவில்லை. ஆறுமுகம் எண்டால் கொஞ்ச நஞ்சமில்லை பேலியாகொட நாடு பூராகவும் நடுங்க வைச்சான். அங்கை மட்டும் தானா... அந்தக்காலத்திலை இந்த ஊரிலை நான் செய்யாத கூத்துக்களா? ஆறுமுகமெண்டால் குடல் நடுங்காதவங்கள் ஆர்இருந்தாங்கள்...அந்தக் காலத்திலை...

ஆறுமுகத்தின் குரல் முற்றத்தில் நின்று ஒலித்து ஓய்ந்தது. ஆறுமுகம் முற்றத்தில் நிற்பதற்கு அந்தக் குரலும் வாயிலும் கையிலும் மாறிமாறிக் கனன்று கொண்டிருக்கும் சுருட்டுத்தான் சாட்சி.

அமாவாசை இருட்டு.

ஆறுமுகம் பேச்சோடு நிறுத்திக்கொள்ளாது இடைக்கிடையே இடிபோன்ற சிரிப்பையும் வெடித்தார்.

அந்தக் காலத்தில் ஊரிலே அவரது திருக்கூத்துக்களை சகிக்க முடியாமல் மக்கள் அவரை விரட்டியதும் நாடோடியாகி பேலியாகொடையில் நாட்டாமை வேலை செய்ததும் சகட யோகத்தால் அந்த ஊரைவறுகி முதலாளியாகி பணம் தந்த பவிசில் ஊர்ப்பெரியார் ஆகி கோவில் திருவிழாக்களுக்கு மட்டும் உபயகாரராக பிறந்த ஊருக்குவந்து போய்க்கொண்டிருந்தவர் ஆறுமுகம் ஒருமுறை உதையோடு ஊரில்வந்து விழுந்தவர் விழுந்தவர்தான். அப்புறம் பேலியாகொடையை திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

ஆறுமுகம் பீச்சல் பயத்தோடு ஊருக்கு வந்து முடங்கிக் கொண்டாலும் வெண்டகதையை மட்டும் விடவில்லை.

நாளுக்கு ஒருகடிதம் கும்பிட்டுக் கும்பிட்டு எழுதிறாங்கள். வாருங்க வந்து கடையை நடத்துங்க எண்டு... எனக்குத்தான் விருப்பமில்லை. இவ்வளவு காலமும் வெளியிலை இருந்திட்டம் இனிக் கடைசிக் காலத்திலை ஊர்வேலையளிலை மினக்கெடலாமண்டு...

அந்த மினக்கேடுதான்... இப்போது முற்றத்தில்...

ஆறுமுகம் நிறைவெறியில் நிற்கிறார், அவருடன் நாலைந்துபேர் நிற்பது கசமுசுக்கிறது.

''எங்களை ஆரெண்டு தெரியாமல் கொழுவலுக்கு வந்திருக்கிறார்கள். அவங்களுக்கு நல்லபாடம் படிப்பிக்க வேண்டும்.''

குரலுக்கு வெறியின் தடுமாற்றம்.

''அப்பனே முருகா...'' பிரமாண்டமான தன் சதைப் பிண்டத்தை சரித்து நிமிர்த்தி உள்ளே நுழைந்த ஆறுமுகம் திண்ணையில் அமருகிறார்.

வலதுபுறத் திண்ணையில் படுத்துக்கிடந்த நான்ஒரு மரியாதைக்காக எழுந்து இருக்கிறேன். திண்ணைத் தாரோடு ஒடுங்கியிருக்கிறாள் அம்மா. ஊரில் உள்ள பெரிய பிரச்சனையை எனக்கு முன்கூட்டியே கூறாமல் விட்டதன் தவறை எண்ணியோ - என்னமோ அம்மா ஒருவித பயப்பிராந்தியத்துடன் இருக்கிறாள்.

பெரிய பிரச்சனைக்காகத்தான் அவர்கள் வந்திருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் உடனே வெளிப்படுத்துவதாக இல்லை. வழக்கமான சம்பாஷனை.

''தம்பியின்ர படிப்புகள் எப்பிடி... யூனிவர்சிற்றியிலை...''

''கண்ட விளையாட்டிலும் ஓடித்திரியாம கவனமாப் படிக்கவேணும்... அம்மாவும் உன்னை நம்பித்தான்...''

''இந்த ஊரிலேயே முதல் முதல் யூனிவர்சிற்றிக்குப் போனவர் நீங்கதான் தம்பி... நாங்க பெருமைப் படுகிறம்...''

''தம்பி எப்ப வருமெண்டுதான் காத்துக்கொண்டிருந்தாங்கள்...''

''நான் முந்தி வியாபாரத்துக்கு அங்காலைப்பக்கம் போறான்... சரியான குளிர்... தம்பி எப்பிடிச் சமாளிக்கிறியள்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருந்து(பஸ்)ச் சேவை சீர் கெட்டிருப்பதற்குக் காரணம் யார்தெரியுமா? றைவரும் கொண்டக்டரும்தான்.

ஏனென்றால் இவர்களுக்கிடையே ஒற்றுமை இல்லையே.

ஒருவர் நடத்துநர், மற்றவர் ஓட்டுநர்.

—தர்மா

''என்ன இருந்தாலும் எங்கட தாழ்வாரத்துக்குள்ளேயே யூனிவர்சிற்றி வந்தாப்பிறகும் அங்கைதான் போகவேணுமெண்டிறீங்கள்... ஏதும் குசியள் இருக்கும் என்ன தம்பி...''

வார்த்தைக்கு வார்த்தை தம்பியும் விமர்சனமுமாக மழை ஓய்ந்தது. நான் எனக்குள் சிரித்துக்கொண்டேன்.

''கதையை விட்டுப்போட்டு வந்த அலுவலைப் பாருங்க'' காரியத்தில் கண்ணான ஒருவர்.

என்ன அலுவலோ, எனக்கென்றால் ஒன்றும் புரியவில்லை. சிதம்பர சக்கரத்தை எதுவோ பார்த்ததாம் அதைப்போல் இருந்தது.

''தம்பி... இந்தக் கள் இறக்கிறதுக்குப் பனைமரம் குடுக்கிற விசயமாகத்தான்... உனக்கும் சொல்லவேண்டுமெண்டுதான் இருந்தனான்'' அம்மா கூறிமுடிக்கவில்லை.

ஆறுமுகம் குறுக்கே பாய்ந்தார்.

''பனைகுடுக்கிற விசயமெண்டு சும்மா கதைச்சால் முடிஞ்சுதா? இது சிம்பிள் விசயமில்லை. மானப்பிரச்சனை...எங்கடவெள்ளாம் சாதியின்ர மானப்பிரச்சனை.

''இப்ப பாரும் அந்த நாளையிலை பத்துச்சதம் கள்ளு விக்கேக்குள்ளேயும் பனைக்கு வருஷம் பத்து ரூபாதான் தந்தவங்கள். இப்ப ஒருரூபா பத்துச்சதம் விக்கேக்குள்ளேயும் பத்துரூபா தான் தந்தவங்கள். எளிய வடுவாக்கள் எங்கட தலையிலை குடுமி கட்டப்பார்க்கிறான்கள்'' துள்ளிக்குதித்தார் ஒருவர்.

சட்டென்று எனக்கு ஒரு எழுத்தாள நண்பர் விரக்தியுடன் கூறுவது ஞாபகத்தில் மிதந்தது.

''அந்தக் காலத்திலை ஐந்து சதம் பேப்பர் விக்கேக்குள்ளயும் கதை எழுதிறவைக்கு இருபது ரூபாதான் குடுத்தவங்கள்... இப்ப ஒரு ரூபா விக்கேக்குள்ளேயும் இருபது ரூபாதான்... குடுக்கிறார்கள்— இந்தப்பெரிய எழுத்தாளர்கள் பொறுக்கயில்லையா?'' என்று கேட்டேன். ஒரு பொயின்ற் இலேயே அவர்களைமடக்கி விட்டதாக-என் யூனிவர்சிற்றி படிப்பைப் பற்றி அவர்கள் இப்போது புரிந்திருப்பார்கள் என்று பெருமிதத்துடன் நிமிர்ந்தேன்.

ஏமாற்றம்.

''பெரியவங்களே... மானரோசமத்த பிச்சைக்கார பயல்கள் பொறுப்பாங்கள்... நாங்க பொறுப்போமோ... நல்லகதை...''

கொலு பிடித்தவரானார் ஆறுமுகம். எனக்கு நெஞ்சம் நெருடியது... எம்நாட்டு எழுத்தாளர்களைப்பற்றி இவர்கள்தான் எவ்வளவு கீழாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். முன்னால் இருந்தவர்களைப் பார்க்கவே என் மனம் அருவருத்தது.

''ஒருபனைக்கு ஐம்பது ரூபா தராட்டில் கள்ளிறக்கிறதற்கு மரம் குடுக்கிறதில்லையெண்டு நாங்க தீர்மானிச்சிருக்கிறம். மரம் முழுக்க எங்களிட்ட இருக்குது... அவங்களால் என்னசெய்ய ஏலும்... நாங்க சொல்கிறபடி ஆடத்தான் வேணும்.'' ''இப்பிடித்தான் நினைச்சு நாங்களெல்லாம் உசாராகிப்போட்டம். ஆனா உங்கட அம்மா மட்டும்...''

அம்மாவின் சீதனக்காணியில் நூற்றைம்பது பனை மரங்கள் நிற்கின்றன. சரி அரைவாசி கள்ளுப்பனை. எழுநூற்றைம்பது ரூபாவுக்கு குறையாமல் வருடத்தொடக்கத்தில் அம்மாவுக்கு கிடைக்கும். அப்படி இப்படியென்று இதுபோன்ற வருமானங்களும் இல்லையென்றால் அம்மாவால் எப்படி எங்களை வளர்த்திருக்க முடியும் எனக்கு இரண்டுவயது நடக்கும்போது தான் அப்பாவை விதிகொண்டு போய்விட்டதே... அம்மா தன்னை கசக்கி எங்களுக்கு உரமாகியதோ... திண்ணைத்தூணோடு ஒதுங்கி இருக்கிறாள்.

''தம்பி... நாங்களெல்லாம் பனை குடுக்கிறதில்லை நிப்பாட்டிப்போட்டம். உங்கட அம்மா மட்டும்காசை வாங்கிக்கொண்டு கள்ளிறக்கச் சொல்லிப்போட்டா...,

''படிக்கிறநீங்க... புத்தியுள்ளனீங்க சொல்லுங்க, சொல்லுங்க பார்ப்பம் சரியா எண்டு...''

தூ... இந்தப் பிச்சைக்காசுக்கா... எங்கட சாதிப் பெருமையை குலைய விடுகிறதா?'' துள்ளி எழுந்தார் ஆறுமுகம்.

பிச்சைக்காசாம் பிச்சைக்காசு... உண்மைதான் எங்கோ இருக்கும் ஊரில் போய் விழுந்து ஏமாற்றி வறுகிச் சேர்த்தவருக்கு அது பிச்சைக்காசுதான்... ஆனால் எங்களுக்கு! என்மனம் சென்ற வருடத்து நினைவுச்சுழி

கப்பலோட்டிய தமிழன் படத்திற்குப் போயிருந்தோம். எங்களில் ஒருவர் படமாளிகையில் வேலை செய்பவரிடம் கூறினார் கப்பலை நேரத்துக்கு ஓட்டலாமே என்று அவர் சொன்னார்.

கப்பல் ஓட்டுவது தமிழனல்லவா எப்படி நேரத்துக்கு ஓட்டுவது என்று.

—தர்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் மூழ்கிவிட்டது. சென்ற வருடம்... உயர்தர வகுப்புப் பரீட்சைமுடிவு எனது உயர்ந்த சித்தியை அறிவித்தது.

எனது மிக உயர்ந்த சித்தி, தடைகளைத்தாண்டியது தடுக்கி விழுந்த நண்பர்கள் எத்தனைபேர்...ம்...

அம்மா என்னைப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்ப பணம் தேடி அலைந்து உலைந்து களைத்துவிட்டாள் கண்ட பலன் கைவிரிப்புத்தான். இதே ஆறுமுகத்திடமும் ஓடினுள் சுற்றிவளைத்துப் பார்த்ததில் மாமா முறையாம் கடையென்னவோ ஆகஸ்ட் கலவரத்தில் சரியாகிவிட்டாலும் பாங்க் இல் இருப்பதே பல இலட்சம் தேறும் என்று திமிரோடு வந்து இறங்கியவர் அவர். அம்மா கெஞ்சிக்கேட்டாள்.

''ஊரிலை இருக்கிறவைக்கு காசு தேவையெண்டால் என்ர மடியிலதானு கண் ''என்று மறுபேச்சுப்பேசி மறுத்து விட்டார். அப்போது தான் அம்மாவின் நினைவிலேயே பனைமரங்கள் சுழன்றன. கள்ளிறக்கும் கந்தன் சுழன்றுன். அம்மாவுக்குத் தயக்கம் இன்னும் பத்து நாட்கள் இருக்கின்றன வருடம் பிறக்க... முதலாம் திகதி வருடக்காசும் கையுமாக வந்து நிற்பான் கந்தன் இப்போது எப்படிக் கேட்பது... ''கந்தன் உன்னட்ட ஒரு அலுவல்''

''என்னங்க''

''என்ர பகன் யூனிவசிட்டிக்கு எடுபட்டது. உனக்குத் தெரியும். இந்தக் காலத்தில பெடியள் எடுபடுகிற காரியம் தலையால தண்ணி குடிச்சமாதிரி... இப்பிடியிருக்க கிடைச்ச இடத்தையும் போகாமவிடப்படாது.

---

**காதல் மடல்கள்**

மாதவி தன்னைப் பிரிந்து சென்ற கோவலனுக்குத் தாழம் பூவின் தோட்டில் பித்திகையின் முகையாகிய எழுத்தாணியால், செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து மடல்வரைந்து வசந்தமாலையிடம் கொடுத்து அனுப்பினுள் என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது.

சகுந்தலை தாமரை இலையின் பின்புறத்தில் நகத்தால் கீறித் தனது காதல் உணர்ச்சியைத் துஷ்யந்தனுக்குத் தெரியப்படுத்தினுள் எனச் சாகுந்தலம் இயம்புகின்றது.

தொகுப்பு; திக்கவயல்

---

சிங்கம் புலியை வைத்து சேர்க்கஸ் செய்கிறனே அவன்தான் ஆண்.

அந்த ஆம்பிளையையும் தலகணி மந்திரத்தால் அடக்கி ஆழுகிறளே! அவள்தான் பெண்.

—ஜோக்கிரட்டீஸ்

---

கந்தனுக்கு புரியவில்லை. நிமிர்ந்து பார்த்தார். நான் திண்ணையில் இருந்தனுன் இருந்தபடியே இருக்கிறேன்.

''அவனை அனுப்ப அடுக்குப் பண்ணவேணும்...ஒரு ஆயிரம் ரூபாயெண்டாலும் இருந்தாத்தான் வருசமும் பிறக்கப்போகுது...''

கந்தன் சிரித்தார்.

''இதுக்கா இவ்வளவு தூரம் யோசிச்சனீங்கள். ஒரு சொல்லுச் சொன்னுல் காணுதா என்றுவிட்டுப் போனவர் மறுநாளே பணத்துடன் வந்தார். ஆயிரம் ரூபா.

''எழுநூற்றைம்பது தானே'' அம்மாவுக்கு தயக்கம்.

''அதுக்கென்னம்மா... அடுத்த வருசத்துக்காசிலே கழிக்கலாம்தானே...''

அவருடைய உயர்ந்த உள்ளம் அம்மாவின் கண்களைக் கசியவைத்தது. கந்தனுக்குத்தான் எத்துணைப் பெரியமனது.

இந்தவருடம் முன்னைய இருநூற்றைம்பதையும் கழித்து மீதிக்காசைப் பெற்றுக்கொண்டு கள்ளிறக்குவதற்கு கந்தனை அனுமதித்து விட்டிருக்கிறுள். அம்மா அதன் விளைவுதான், ஊர்கூடியது. துள்ளிக்குதித்துநட்ட நடுநிசியில் தள்ளாடும் வெறியில் இத்தனை பேர்கூடி வீட்டுக்கு வந்திருக்கிறுர்கள்.

''ஒருகிழமையா நாங்கள் போராடிக்கொண்டிருக்க உங்கட அம்மாதான் கருங்காலி மாதிரி...''

போராட்டமா? இது என்ன போராட்டம். உற்பத்திச் சாதனங்களை தம்வசம் வைத்திருக்கும் முதலாளிகள் தொழிலாளரை அடிமைகளாக்கப் பார்ப்பதற்குப் பெயரும் போராட்டம் தானு?

''அவங்கள் ஒற்றுமையாக நின்று கள் ஏருமல் விட்டால்...'' நான் எனது நம்பிக்கையை வார்த்தையாக்குகிறேன்.

''அதுதானே சொல்லிறம் அவங்கள் முந்தின ஆக்களில்லை. இப்ப இப்ப அவங்களுக்கும் வெளிச்சம் பட்டிட்டுது. அவங்கள் ஒத்துநிற்கிறபோது நமக்குள் பிளவு இருக்கப்படாதெண்டுதான்...'' என்றுர் ஒருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெட்சணாமூர்த்தி தரிசனம்

அண்மையில் யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற சங்கீத வித்துவான் கருணாகரனின் கச்சேரிக்கு பிரபல மிருதங்க வித்துவான் தஞ்சாவூர் உபேந்திரன் மிருதங்கம் வாசித்துக் கொண்டிருந்தார் அவருடைய ஆவர்த்தனங்களில் தவில் வித்துவான் தெட்சணாமூர்த்தியின் சில 'பிடி'களை அவதானித்துச் சுவைத்த நான் கச்சேரி முடிந்ததும் ஆர்வத்தோடு சென்று மேடையிலிருந்த உபேந்திரன் அவர்களைக் களிப்புடன் பார்த்து ''உங்கள் வாசிப்பு தவில் வித்துவான் தெட்சணாமூர்த்தியை ஞாபகப்படுத்தியது'' என்றேன். உடனே அவர் தனது இருகரங்களையும் மேலே உயர்த்தி அவர் பெரியமேதையல்லவா? என்று பூரிப்போடு கூறினார்.

''அம்மாவின்ர கதையைவிடுவம்... இப்ப அவங்கள் ஏறுமல் விட்டால் ஆருக்கு நட்டம். நீங்கதான் குடிக்ககள் இல்லாமல் தவிப்பியள். என்கிறேன் நான்.

தேவைகளை உணர்த்துவதாலும் அவர்களது துவேஷத்தை பின்தள்ளமுடியும்.

இடிஇடியென்ற சிரிப்பு குறுக்கிடுகிறது. ஆறுமுகம் தான் சிரிக்கிறார்.

''தம்பிக்குத் தண்ணி வென்னியளைப்பற்றி தெரியாது... நாங்க கறுப்புப் பாவிப்பம்.''

வாயிலிருந்து சாராயத்தின் துர்நாற்றம் குப்பென்று அடிக்கிறது. குலப்பெருமை காக்கவாம் கூடியிருக்கிறார்கள்.

''அவங்களுக்கு மட்டும்தான் பனையேறத்தெரியுமோ நான் ஏறி எல்லாருக்கும் இறக்கித்தாறன்.'' வெறியின் எல்லையில் ஒருவர்.

''இவன் அலம்பல் குமாரன்ர கதையை விடுவம்... அவங்கள் எத்தினை நாளைக்கு தாக்குப்பிடிக்கிறவங்கள் வயிறு வத்தின எல்லாம் சரியாகப்போகும்''

'எனக்கொரு யோசனை வருகுது...அவங்களிலை நாலு பேரை கூலிக்குவைச்சு நாமளே தொழிலைச் செய்தால் எப்பிடி...உழைப்போட உழைப்பாகவும் போகுது' ஆறுமுகத்துக்கு வியாபாரிமூளை.

''அண்ணை அந்தக்கதையை விடுங்கோ ஒருத்தன்வர மாட்டான். அதெல்லாம் அந்தக்காலம்...இப்ப...''என்றார் ஒருவர்.

ஆறுமுகத்துக்கு அதைக்கேட்டு கொழுப்பிடித்து விட்டது.

''காலமோ...நானும் பார்க்கிறன் அதுமாறுகிறதை. வெட்டுங்கடா பாளையை''

பாளையை மட்டுமில்லை மரத்தையே தறியுங்கடா.

''சரி இரண்டிலை ஒண்டு... பனைமரம் குடுக்கிறதை நிற்பாட்டிறியளோ இல்லையோ? ஊரோட ஒத்து நிக்காட்டில் செத்தவீடு கலியாண வீட்டுக்கும் ஒருத்தருமில்லை''

மழை பொழிந்து ஓய்ந்தது போன்று இறுகிப்போன மௌனம்.

சிறிது நேரத்தில் ஊடுருவிக்கொண்டு புறப்படும் அம்மாவின் உறுதியான குரல். ''என்ர பனையைகுடுப்பன் குடுக்கமாட்டன் அதிலை மற்றவைக்கு கதையில்லை

அவவின்ர கதையை விடுவம் படிக்கிற தம்பிஎன்ன முடிவு சொல்லுகிறீர்.


முடிவா? அம்மாவின் முடிவைவிட வேறு ஒருதனிவான முடிவா? நான் மௌனமாகிறேன்.

'நாங்களும் பார்க்கிறம்' வெட்டுங்கடா பாளையை கொண்டுவா கத்தியை'

பாளையை மட்டுமல்ல... கழுத்தையே வெட்டவேணும், வெறிக்குரல்கள் நகர்கின்றன. உறங்கச் செல்ல நள்ளிரவு கழிந்துவிட்டதால் விடிந்து எழும்பிய போது வானத்தில் ஆதவன் பிரசவமாகிவிட்டான், முற்றத்துக்கு வந்தேன். அம்மா பனைவளவுப்பக்கம் ஏக்கத்துடன் பார்த்தபடி நிற்கிறாள், நானும் பார்க்கிறேன், வளவின் மத்தியில் பனம் பாளைகள் குவிந்து கிடக்கின்றன. யாரிடம் கேட்பது? யாரோடு மோதி என்னபலன் பாளைகளை மீண்டும் ஒட்டவா முடியும். படலையைத் திறந்து கொண்டு வெளியே வந்தபோது தூரத்தில் கந்தன் உற்சாகத்துடன் சயிக்கிளில் வருவது தெரிகிறது உழைக்க வரும் உற்சாகம், இந்தக்காட்சியைக்கண்டால் அவர் உள்ளம் வெடித்துத்தான் போய்விடும்.

''அண்ணை''

கால் பிரேக்போட்டு கந்தன் இறங்குகிறான். நான்வளவுக்குள் பாளைகள் அறுபட்டுக்கிடப்பதை காட்டுகிறேன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைக் கிண்டல்

## ரஜனி காந்தம்



□ சிகரட் புகைமணமே பிடிக்காதனி ஏண்டி அந்த சிகரட் ஊதித்தள்ளுபவனைக் காதலித்தாய்.

● அவர் ரஜனிகாந்த் மாதிரி சிகரட் புகைக்கிறு ரெடி.

□ □ □ □

பல் டாக்டர்: யார் உன் பற்களை உடைத்தது.

ஒரு: ஒரு படரசிகர் வாணிஸ்ரீ யின் பற்கள்தான் அழகென்ருர், நான் இல்லை விஜயாவின் பற்கள்தான் என்றேன்... கோவத்தில் அடித்துடைத்திட்டார்.

□ ● □ ● □

மனைவி: வசந்த மாளிகை நான் எல்லாமாக 75 தடவை பார்த்தேன்,

கணவன்: அதுசரி... மழை வரப்போகுது எங்க ஓலைக் கொட்டில் ஒழுகப்போகுது.

● ● ● ●

பிச்சைக்காரன் 1: அக்பர் அரசனுக்கு பிருதுவி ராஜ் நடித்தாரே... அது நடிப்புத்தான்.

பிச்சைக்காரன் 2: ஏன் சிவாஜியின் ராஜராஜசோழன் நடிப்புக் குறைவா.

● □● □● □● □

□ சின்னப்பாதேவர் பெரும் படம் தயாரிப்பாளர் தான் ஆனல்...

● ஆனல் என்ன?

□ மிருகங்களைப் பாடவைத்து நடிக்கவைக்க வில்லையே!

□ ● □ ● □

□ நண்பன் ஆஸ்பத்திரியில் மயக்க நிலையில் படுத்திருக்கிருர் பார்க்க போகவேணும்.

● ஏன் விபத்தா...

□ கலை விபத்து! சந்திரபாபு மாதிரி விழுந்து காட்டினுர் மூளை அடிபட்டுப் போச்சு.

★ ★ ★ ★

முகத்தில் சோகம் படர்வதை அவன் சிரிப்பு மறைக்கிறது.

தம்பி இவங்கள் இதைமட்டுமில்லை... சாதித்திமிரிலை இதுக்கு மேலையும் செய்வாங்கள். நான் இதை எதிர்பார்த்தனுன்தான்,

ஒண்டுக்கையொண்டு நம்மட சனம் அடிபட்டுக் கொண்டிருக்கிறதாலதான். நாங்க கீழே கீழே போறம் என்றேன் நான்.

''உண்மைதான் தம்பி...அதுக்காக நாங்களும் மனிசர்தானே. அவங்களுக்கிருக்கிற பிடிவாதம் எங்களுக்கு இல்லையா? பத்தொன்பதாம் நூற்ருண்டுக்குத் திரும்பிப் பார்க்கினம். வயிறு காய்ஞ்சா அடிமைப்பட்டு வருவமெண்டு அவங்கட நினைவு. அந்தக்காலம் மலை ஏறிப் போச்சு... வீட்டுக்கொருத்தன் உத்தியோகத்தில் இருக்கிருன். இல்லாதவன் விசுவமடுவிலை மண்ணிலை உழைக்கிருன். நாங்களேன் இவங்களை நம்பியிருக்கிறம்.''


எனக்குப் பெருமிதமாக இருந்தது. உள்ளூரக்கவலை இந்தப் பிரச்சினை இப்படியே தீராமல் பிரச்சனையாகவே இருந்து பூசலை வளர்த்துவிடுமோ?

''அண்ணை பேசித்தீர்த்துக் கொண்டால்... ''நான் வார்த்தைகளை முடிக்கு முன்னே கந்தன் குறுக்கிட்டான்.

''நாங்க தயார்தான். ஆனல் அவங்கள் பனைச்சொந்தக்காரர்கள். நாங்க தொழிலாளிகள் எண்ட வகையிலை தான் பேச்சுவார்த்தை இருக்கவேணும். குறைஞ்சசாதி கூடினசாதி என்றமுறையிலை... எடுத்த வாய்க்கெல்லாம் எங்களை பரிசுகெடுக்கிற மாதிரி வரப்படாது... அப்பிடி வந்தா நாங்க ஓம்படமாட்டம்.'' உறுதியாக நியாயத்தோடு கூறிவிட்டு கம்பீரமாக சயிக்கிளில் ஏறினுர் கந்தன்.

—(யாவும் கற்பனை)

---



## அடிசிற் கினியாள்

எப்படிப்பட்ட வீடு உங்க மனைவிக்குப் பிடிக்கும் வீட்டுக்கு அடுக்களை இல்லாவிட்டாலும் பறவாயில்லை, தியேட்டர் அருகாமையில் இருக்கவேணும்.

---

ஆடு: மனிதன் எடுக்கும் விழாக்களில் ஒருவிழாத்தான் பாராட்டிற்குரியது.

மற்ற ஆடு: எது.

ஆடு: மரம் நாட்டுவிழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில்பெருக வளம் குவியும்...

**வளம் தரும் தொழிலுயர வழிகாண விழைகின்றீர்களா?**

- கைத்தொழில்களை ஆரம்பிக்க
- அவற்றை நிர்வாகம் செய்ய
- விஸ்தரிக்க

**எந்திரவியல் பொறியியலாளரின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளைப் பெற**

தொடர்பு கொள்ளுங்கள்

**எந்திரவியல் பொறியியலாளர்.**
மே/பா சிரித்திரன்
559, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

## சிற்றி பேணிச்சர்...

- கலைத்துவமான
- நிலையான உறுதிமிக்க
- விலையில் நேர்த்தியான

**கவினுறு தளபாடங்களின் மனங்கவர் தேர்வுக்கு....**

**உங்கள் இல்லம் பளிங்கு மாளிகையாகத் திகழ....**

உங்கள் தேவைகளை திருப்தியுடன் பெற...

## சிற்றி பேணிச்சர்

கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

## சரித்திரம் சிரிக்கிறது

திக்குவல்லை

**உ**கண்டா என்பது அந்தநாட்டின் பெயர் புகண்டா என்பது அந்த நாட்டிலிருந்த பழைய ராச்சியத்தின் பெயர்.

லுகண்டா என்பது அந்தநாட்டு மொழியின் பெயர் முகண்டா என்பது அங்கு வாழும் மக்களின் பெயர். எவ்வாறு உகண்டாவின் பெயர்கள், சிக்கலாக உள்ளதோ அதுபோல வரலாறும் சிக்கலாகி உள்ளது.

''ஆசியர்கள் யாவரும் உகண்டாவை விட்டுவெளியேறிவிட வேண்டும்'' இவ்வாறு முன்னாள் உகண்டாவின் ஜனாதிபதி இடி அமீன் கர்ஜனை செய்தார். அவரின் கர்ஜனையைக் கண்டுபயந்த ஆசிரியர்கள் உயிரைப் பிடித்துக்கொண்டு ஓட்டம் பிடித்தனர். யூதர்களை நாட்டைவிட்டுக் கலைப்பது தலையில் உள்ளபேனை எடுப்பது போன்றது என்றார் ஹிட்லர். ஆசியர்களை நாட்டைவிட்டுக்கலைப்பது கடவுள் இட்ட கட்டளையை நிறைவேற்றுவது என்றார் இடி அமீன்.

''ஆற்றங்கரையின் மரமும் அரசு அறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே'' என்றுபாடி வைத்தார் தமிழ் மூதாட்டி ஆசியர்கள் விட்ட கண்ணீருக்குப் பதில், சில காலத்தில் கிடைத்தது, உகண்டாவின்விமானநிலையத்தில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த இஸ்ரவேலியக் குடிமக்களை விடுவிப்பதற்காக இஸ்ரவேல் மாபெரும் தாக்குதலை நடாத்தியது. இதில் நூற்றுக்கணக்கான உகண்டாப் போர்வீரர்களின் சடலங்களை இடி அமீன் காவிச்சென்றார்.

சிலகாலங்கள் சென்றன. விளம்பரத்தால் உயர வேண்டும் என எண்ணிய இடி அமின், தன்சானியநாட்டின் அதிபரை முஷ்டிச்சண்டைக்கு அழைத்தார். தான் ஒற்றைக் கையால் சண்டைசெய்து தன்சானிய அதிபரை வெல்லப் போவதாகவும் முகம்மது அலி மத்தியஸ்தராகக் கடமையாற்றலாம் என்றும் யோசனை கூறினார். செய்தி வந்த சிலகாலத்திற்குள் தன்சானியாவின் ஆதரவு பெற்ற புரட்சிப்படைகளால் தோல்வியுற்ற இடி அமீன் ஒற்றைக் கையையும் காட்டமுடியாமல் எங்கோ ஓடி மறைந்து விட்டார்.

பத்திரிகைச் செய்திகளில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த இடி அமின் எங்கிருக்கிறாரோ, என்ன செய்கிறாரோ கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

அன்று ஆசியர்களை ஓடோட விரட்டினார் இன்றோ அவரே ஓடோட விரட்டப்பட்டு விட்டார்.

சரித்திரம் ஒருமுறை தன்னைத்தானே பார்த்துச் சிரித்துக் கொள்கின்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிச் சிறுகதை:

> சென்ற இதழில் அறிவித்த படி சிறுகதைப் போட்டிக் கதைகளை உங்கள் விமர்சனத்திற்காக பிரசுரிக்கின்றோம். உங்கள் விமர்சனத்தை 20-8-79 க்கு முன்பு அனுப்பிவையுங்கள்.
>
> நன்றி
>
> —ஆசிரியர்




சிறிய குடிசைகளின் கூட்டம் இரண்டு வரிசைகளை ;பிளந்து செல்லும் அந்த குறுகலான மணற் பாதையை தூசி மண்டலமாக்கிக் கொண்டு, சிவப்புநிற மோட்டார் சைக்கிளொன்று 'படபட'வென ஓசையெழுப்பிய வண்ணம் விரைந்து செல்லாயின் குடிசை வாசலில் வந்து நிற்கிறது.

தந்திச் சேவகன்!

ஒவ்வொரு குடிசைக்குள்ளும் ஒவ்வொரு காட்சிகள், அன்றைய உணவிற்கு என்ன வழி?' என கணவனைப் பிய்த்தெடுக்கும் மனைவி, நோய் நொடியால் முக்கி முனகும் முதுமைக் கூட்டம், சீட்டுக் கச்சேரி நடத்தும் பையன்கள் கடூரவெய்யிலில் குய்யோமுய்யோ என கூச்சலிட்டு விளையாடும் நிர்வாண சிறுவர்கள்; பால்சுரக்கா மார்பகங்களை சூப்பிச் சூப்பி வீறிடும் மதலைகள்...

மோட்டார் சைக்கிளின் ஓசையில் அந்த இயக்கங்கள் அனைத்தும் ஸ்தம்பித்து விடுகின்றன, ஒவ்வொரு குடிசை வாசலிலும் தலைகள் தோன்றி கண்கள் ராம பாணங்களாகி செல்லாயின் குடிசையருகே தைந்து நிற்கின்றன.

செல்லாயி ஓடோடி வந்தாள் தந்திச் சேவகன் கொடுப்பதை கைநீட்டி வாங்கினாள்.

எங்கும் ஒரு ஸ்தம்பித நிலை கண்களில் கூர்மையும் பிளந்த வாயும், கன்னத்தில் கையுமாக விழி பிதுங்க சனங்கள் பார்ப்பதெல்லாம் வாயெல்லாம் பல்லாக கண்கள் மலர்ந்து கன்னங்கள் குமிழியிட நிற்கும் செல்லாயியைதான்.

வறுமையும் பசியும் எல்லோரையும் வாட்டும் பொழுது இரண்டாயிரம் ரூபா பெறுமதியான துண்டையல்லவா? தந்திச் சேவகனிடம் அவள் பெற்றுக்கொண்டிருக்கிறாள். குழாயடியில் குந்தி சாம்பலையும் மணலையும் தேங்காய் தும்பினால் தொட்டுத் தொட்டு செல்லாயின் எவர் சில்வர் பாத்திரங்களை தேய்த்துக் கொண்டிருந்தாள் ராஜம். அவளுடைய கண்களும் இந்தக்காட்சியை பார்த்துக் கொண்டுதானிருந்தன. இனி என்ன நடக்கப்போகின்றது என்பதை அவள் அறிவாள்.

மோட்டார் சைக்கிளின் படபட வென்ற சப்தம் மணற் பாதையை புகை மண்டலமாக்கிக் கொண்டு பறந்த தந்திச் சேவகன் மறைந்து விட்டான்.

ராஜம்! ராஜம்!!

செல்லாயின் குரல் பெருமை பெருமிதம், ஆனந்தம் ஆங்காரமாக அந்தகுரல் ஒலிக்கிறது.

ராஜம்தலை தூக்கிப்பார்த்தாள் தந்திச் சேவகன் கொடுத்தகவரை எடுத்துக் கொண்டு குலுக்கலும் மினுக்கலுமாக படபடப்புடன் வருகிறாள் செல்லாயி, காலையில் குளித்திருக்கிறாள் போலும் விரிந்த அவளுடைய நீண்ட கூந்தல் பிருஷ்டபாகம் வரை தொங்குகின்றது இப்பொழுது குடிசை வாசல்களில் நிற்கும் பெண்களில் சிலர் குழாயடியை நெருங்குகிறார்கள்.

''ஏண்டி ராஜம்! இன்னுமா வேலை முடியலே, சும்மா பொய்க்கு நொண்டு நொண்டுன்னு நோண்டிகிட்டிருக்கே ஒங்களெல்லாம் வீட்டு வேலைக்கு வைச்சா உருப்பட்டாப் போலத்தான் சரி சரி அவுருதான் அடுத்த கெழம சவூதி அரேபியாவிலிருந்து வரப் போறாரே. காரு கொண்டு வாரரு இந்த லட்சணத்துலே உன்ன மாதுரி சோம்பேறிகளே வீட்டு வேலைக்கு வைச்சுக் கொள்ளேலுமா? கைகழுவிட்டு, நல்லவொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமியை மிஞ்சிய மருமகள்.

ஒரு ப(தி)டி மேல்

குந்தி நாலு கணவனுக்கு, கர்ணன், தர்மன், வீமன், அருச்சுனன், ஆகியோரைப் பெற்றாள்.

அவளது மருமகள் திரௌபதி மாமியாரைவிட ஒரு ப(தி)டி மேலே சென்று தர்மர், வீமன், அருச்சுனன் நகுலன் சகாதேவன் ஆகிய ஐவரை மணந்து ஐந்து பிள்ளைகளைப் பெற்றாள்.

'அகளங்கன்'

---

குட்டியா வேலைக்கு வைச்சுக் கொள்ளவேணும்.

மூச்சு விடாமல் படபடவென பொரிந்து தள்ளுகிறாள் செல்லாயி

மனதிற்குள் இருதய இலையை நோக்கி நெருப்பு தாவுமாப்போல விதிர்விதிர்த்து மெய்சிலிர்க்கிறாள் ராஜம். 'என்ன இது என்னே வீட்டு வேலைக்காரியாகவே மாத்திட்டாளே! என மனம் ஓலமிடுகிறது. தலை நிமிர்ந்தால் கூடிநிற்போருக்கு கண்களில் முகிழ்ந்து நிற்கும் நீர்மணிகள் தெரிந்து விடுமோவென அஞ்சி தலைகுனிந்தாள். அவள் தேய்த்துக்கொண்டிருந்த பாத்திரத்தின் மேற்புரத்தில் இருபுள்ளிகள் சுத்தமாகதெரிகின்றன, கண்ணீர் முத்துக்களால் கழுவப்பட்ட புள்ளிகள்!

"ஏன்'மா செல்லாயி உன் புருஷன் வாரானா?" கிழவி தெய்வானை கேட்டாள்.

கண்களை உருட்டி கிழவியை வெருட்டலுடன் பார்த்தாள் செல்லாயி, என் புருஷனே அவன் இவன்னு பேசுறாளே என நெஞ்சிற்குள் கொக்கரிப்பு "ஆமா!" என பதில்வெடுக்கென பாய்ந்து வருகிறது,

"எப்போ?"

"அடுத்த கெழம"

"எப்படி?"

"ஏரோப்பிளன்லே"

"ஏரோப்பிளேன்லேதான் காரு கொண்டு வாரானா?"

"இல்லே கப்பல்லே"

அந்த பிரதேசத்தில் எங்காவது ஒரு மூலையில் சருகு விழுந்தாலும் அந்த ஓசை கேட்குமளவிற்கு அங்கே நிசப்தம் குடி கொண்டு ஆட்சி புரிகிறது.

'செல்லாயி நீ ராசாத்திதான் இவ்வளவு சம்பாரிக்கிறானே ஒன் புருஷன். அரபு ஊரிலே அப்புடி என்ன வேலயத்தான் செய்யுரான்?"

செல்லாயின் நாசி நுனி எவரோ கிள்ளிவிட்டாப் போல இரத்தம் கன்றி சிவந்து விட்டது என்ன வரவர கிழவி மரியாதையில்லாம பேசுராளே எனபொருமிக் கொண்ட அவள் "ஏய்தெய்வானே நாக்க சுத்தமாக்கி பேசு "என் புருஷன் அங்கே ஒருகொம்பேனியிலே மனேஜராக்கும், மாசம் மூவாயிரம் சம்பளம் அவரப் போய் அவன் இவன்னு மரியாதை இல்லாம......"

சள்புள்'ளென துள்ளிக்குதித்தாள் செல்லாயி.

'அடிப்பாவி! என நெஞ்சுக்குள்ளாக விம்மிவிட்டாள் கிழவி சின்ன வயசுலே ஊத்த ஒடம்பும் சளிவடிக்கிற நாசியுமா மண்ணு தூசியிலே புதுமாதுரி நெளிஞ்சி விளையாடுன அந்த பயலே எத்துண தரம் உச்சிமோந்து அவுங்க அம்மாகிட்ட கொடுத்தவ நான் எனக்கு தெரியாத பயலா அவன் கிழவி விக்கித்துப் போனாள். உரிமை உணர்வினால் அந்தவயோதிக இருதயம் சுருங்கிவிட்டது. கிழவியின் வாயை மூடிவிட்ட பெருமையில் செல்லாயி மறுபடியும் ராஜத்தின் மீது பாய்ந்தாள்

● ●

வெள்ளைத்துண்டை விரித்தாப்போல நிலா வெளிச்சம் முற்றத்தில் விழுந்து கிடக்கிறது. தூரத்தே தெரியும் தென்னை மரங்களுக்கிடையில் செறிந்துள்ள இருளில் கண்பதிந்து குடிலைச வாசலில் அமர்ந்திருக்கிறாள் ராஜம்.

"என்ன புள்ள பலமான யோசின?" கிழவி தெய்வானையின் குரல், இடுப்பில் கைவைத்து முக்கலும் முனகலுமாக நடந்து வந்த அவள் ராஜத்தின் பக்கத்தில் அமர்கிறாள். ராஜத்தை கூர்ந்து நோக்கிய வண்ணம் உன் அப்பன் இன்னும் வரலியா?" என மெதுவாகக் கேட்டாள்.

ராஜம் பெருமூச்சு விடுகிறாள்

"உன் அப்பன் ஒரு குடிகாரன், அதுமட்டுமா உங்கம்மாவ அடிச்சே கொன்னுபோட்டான் அவன். நீயோ கொமரிபுள்ள

---

அகிலப்புகழ்பெற்ற ஹொலிவூட் நடிகர் 'Clark-Cable' (கிளார்க்கேபிள்) பலநூறு ஆயிரம் டாலர் தந்த சினிமாத் தொழிலை விட்டுவிட்டு ஒருசில நூறு டாலர் சம்பளத்தில் ராணுவத்தில் பணிபுரிந்தார். இது அவரது தேசப்பற்றிற்கு எடுத்துக்காட்டு. "Gone with the wind" என்ற அவருடைய படம் இப்பொழுதும் நல்ல வருமானத்துடன் உலகெங்கணும் திரையிடப் படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ● மனிதன் சொன்னுன்—
> —''உலகத்தை நினைக்க எனக்குத் தலையைச் சுற்றுகிறது'
> உலகம் சொன்னது—
> —''மனிதரை நினைக்க எனக்கு என்னையே சுற்றுகிறது'
> 'மௌனு'

ரெண்டு தம்பிங்க சின்ன பயலுவ எப்புடித்தான் காலம் கொண்டு போறது...''

நிலா மறைந்து வானில் இருள் அடர்த்தியாக, மேகவெளியில் புதையுண்டு மினு மினுப்புக் காட்டும் நட்சத்திரங் களில் கண் இலயிக்கிருள் ராஜம்.

''ஆமா ஏன் புள்ளே அவ வீட்டுலே போய் வேலைசெய்யு ரியே ஏதாவது சம்பளம் தாராளா?''

சட்'டென கண்ணீர் ராஜத் தின் கண்களில் பெருக்கெடுத்து விட்டது.

''இங்கே போய் ஏம்மா கஷ்டப் படுற, எப்புடியாவதுபாஸ்போட் எடுத்து அரபு ஊருக்கு போ, அங்கெல்லாம் வீட்டுவேல செஞ் சாலே ரெண்டாயிரம் சம்பள மாம்...'' கிழவி என்னென்னவோ சொல்லிக் கொண்டிருந்து விட்டு பின்பு எழுந்து போய்விட்டாள். உலக விவகாரம் தெரிந்த சமர்த் துக் கிழவி அவள்.

ராஜம் அப்படியே உட்கார்ந் திருந்தாள், நீர்க்குமிழிகளால் சங் கடமான எண்ணங்கள் அவள் மனதில் எழுந்த வண்ணமிருக் கின்றன.

செல்லாயியைப் பற்றித்தான் அவள் எண்ணிக் கொண்டிருந் தாள். இருவரும் பால்ய சிநேகிதி கள். துன்பமும் வறுமையும் வாட் டும் பெற்ருேர்களுக்கு பிறந்தவர் கள், ஒன்ருகவே விளையாடி, பள் ளிக்கூடம் சென்று ஏதோ சில தமிழ் எழுத்துக்களை கற்று வளர்ந் தவர்கள் பெற்ருேர்கள் மண்நா டிச் சென்ற பின்னர் எப்படியோ வளர்ந்தவர்கள்.

செல்லாயி நடேசனை காத லித்து பின் கலியாணமும் செய்து கொண்டாள். அவன் கொஞ்சம் புத்திசாலி எப்படியோ அரபு ஊரு க்கு வேலை தேடிபோய்விட்டான்.

இந்நாட்களில் செல்லாயிக்கு பெரும்துணையாக இருந்தவள் ராஜம்தான். குழந்தை பேறுக்காக அவள் கஷடப்பட்டபொழுது அரும் துணையாக நின்று கண் ணும் கருத்துமாக கவனித்தவள் ராஜம்தான்.

செல்லாயின் குழந்தையை பராமரிப்பது பாத்திர பண்டங் கள் கழுவுவது, வீட்டுவேலைகள் செய்வது எல்லாமே ராஜம்தான்

நடேசன் ஆயிரமாயிரமாக அனுப்பிவைத்தான் நகையென்ன நட்டென்ன, சாறி என்ன என பலவிதமாக அணியத் தொடங்கி ஞள் செல்லாயீ. அவளுடைய வீட்டு வேலைக்காரியாக ராஜம் மாறிஞள்.

ராஜம் நட்புணர்வுடனும் ஒன்ருக வளர்ந்த பாசமுடனுமே செல்லாயிக்கு துணைபுரிந்தாள். எனினும் செல்லாயின் மனம் வேறுவிதமாக வளர்ந்து வந்தது.

இன்று பகல் பொழுதில் குழா யடியில் அவள் சொன்னவார்த் தைகள் ராஜத்தின் பிஞ்சு மன த்தை கொத்தி குதறிவிட்டன.

'அவ வீட்டு வேலைக்காரி யாமே நான்!'

மனத்தில் ஓர் ஆவேஷம் ஆத்ம கௌரமா, என்னே?

X X X

நடேசன் ஊர் வந்துவிட் டான். ஒரு விமானம் போன்ற காரோடு அவன் வந்து சேர்ந்த தும் ஊரே வாயடைத்துப் போயி ற்று, பையன்கள் அல்லோலப் பட்டார்கள். அடே யங்கப்பச என்ற பிரமிப்புத்தான் எங்கும்.

எல்லோருடைய மனத்திலும் நடேசன் இடம் பிடித்துக்கொண் டான். அவனுடைய நடையுடை பாவனை, அட்டகாசமான சிரிப்பு ஆரவாரமான பேச்சு அனைத்தை யும் பார்த்து எல்லோரும் பிரமிப் படைய, செல்லாயி மனம் குதூ கலித்தாள். நடேசனுடன் ஓடி யாடி விளையாடிய பையன்களெல் லாம் அவனை பெயர்சொல்லி கூப் பிடுவதை விட்டுவிட்டு 'தொரே' போட்டு கூப்பிடுவதைக்காண உச்சி பேதலித்த செல்லாயி இனிமே ராஜம் என்னை நோனு ன்னுதானே கூப்பிடனும்' என மனசிற்குள் எக்களித்தாள்.

அநேகமாக எல்லோருக்குமே அரபுநாடு போகும் ஆசைவந்து விட்டது. அதற்கு என்னவழி என அவர்கள் அக்கறையுடன் விசாரித்தபொழுது நடேசன் ஒரு புன்னகையோடு நகர்ந்து விட் டான்.

செல்லாயிதான் பதில் சொன் ஞள்.

''எல்லாருக்கும் வெளிநாடு போவ ஏலுமா? அவரு படிச்சவரு படபடன்னு இங்கிலீஸ் பேசு வாரு, நீங்களும் படிக்கனும் அப்

> ● பிச்சைக்காரன் கரங்கள் சொன்னது,
> ''ஏய்த்துப் பிழைக்கும் பணக்காரனுக்கு கைகளா இருப் பதை விட ஏந்திப் பிழைக்கும் இவனுக்கு கரங்களாக இருப்பது மேல்''
> 'மௌனு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தான் அவர மாதுரி வர ஏலும்...'' என்றெல்லாம் செல்லாயி ஒரு பேராசிரியரைப்போல லெக்சர் அடித்தபொழுது பையன்கள் அசந்து போனுர்கள்.

பையன்களின் ஆசையெல்லாம் கனவாகி விட்டது. என்ன செய்வது என அவர்கள் மண்டையை பிய்த்துக் கொண்ட நேரத்தில், செல்லாயின் குடிசையிருந்த இடத்தில் சிறியதொரு கல்வீடு எழுந்தது. அடடா எல்லாம் அரபு நாட்டுப் பணம் செல்லாயியை பிடிக்க ஏலுமா இனி.

எவ்வளவு பாக்கியசாலி அவள். மனம்போல வாழ்வு கிடைத்தது. இப்பொழுது யாருமே அவளை பெயர்சொல்லி அழைப்பதில்லை, நோனு என்று தான் கூப்பிடுகிறுர்கள். பணம் தேவைப்படும் பொழுது அவளை நோக்கி ஓடுகிறுர்கள் சாமான்கள் அடகு வைக்கிறுர்கள், வட்டிக்கு எடுக்கிறுர்கள், அவள் இந்தவகையில் எல்லாருக்கும் உதவுகிறுள் எனினும் இவ்வளவு இன்பங்களுக்கு மத்தியிலும் ஒரு பெருங்குறை அவள் மனத்தை வாட்டுகின்றது. ஏனென்ருல் ராஜம் எதற்குமே அவளைத்தேடி வருவதில்லை. இந்த தரித்திர மூதேவிக்கு எவ்வளவு ஆங்காரம்! என மனசிற்குள்ளாகவே பொருமினுள் செல்லாயி.

X X

நடேசன் மறுபடியும் வெளிநாடு போய்விட்டான்.

செல்லாயி இப்பொழுது எதற்குமே கவலைப்பட வேண்டியதில்லை. பணம் வந்துவிட்டால் பத்தும் வந்து விடுமல்லவா. அவளுக்கு எடுபிடி வேலைசெய்ய அந்த வீட்டில் எந்த நேரமும் ஆட்கள் நிறைந்து கிடந்தார்கள்.

அவள்மன ஆத்திரமெல்லாம் ராஜம் மீதுதான், எல்லோரும் அவளை மதித்து நடக்கின்ற பொழுது இவள் மட்டும் எவ்வளவு அலட்சியமாக நடக்கிறுள், எங்கோ வேலைகிடைத்து விட்டது போல, காலம்பற போரா, அந்திக்கு திரும்புரா, மொதல்ல அவ வேலைய இல்லாமலாக்கனும் அப்பத்தான் அவ ஆங்காரம் அடங்கும்...' என்றெல்லாம் மனஉளைவுகளில் அவள் பொழுது கரையும்.

நடேசன் வெளிநாடு சென்று ஒருமாதமிருக்கும் கடுமையான கோடை காலமானதால் வெய்யில் சுள்ளென எரிக்கிறது. புகைமண்டலத்தை வியாபகமாகி மணற்பாதையை தூசிகாடாக்கி படபட'வென ஓசை எழுப்பிக்கொண்டு மோட்டார் சைக்கிளொன்று விரைந்து வந்து செல்லாயின் வீட்டை கடந்து நிற்கிறது,

*தந்திச் சேவகன்!*

குடிசைகளிலெல்லாம் முழக்கமான காட்சி, போய் ஒருமாசமாகல்ல மறுபடியும் இரண்டாயிரம் ரூபா அனுப்பி விட்டானு! என்ற ஏக்க பெருமூச்சுகள்.

செல்லாயி ஓடோடி வந்து கடிதக்கவரை எடுத்தாள் தந்திக்காரன் என்னவோ சொன்னுன் ஆ...!என வாய்பிளந்த அவள் மயங்கி விழுந்து விட்டாள்,

சனம் கூடிவிட்டது. எல்லாரும் பரபரத்தார்கள்.

''என்னப்பா என்ன. அவ புருஷனுக்கு ஏதாவது ஆபத்தா!' கிழவி தெய்வானை கேட்டாள்.

''அதெல்லாம் ஒன்னுமில்லை அந்த குடிசையிலே ராஜம்னு ஒரு பொண்ணு இருக்கே, அதுக்கு அரபுநாட்டுலே வேல கெடச்சி இருக்கு. அதுக்கான டிக்கெட் தான் இது. இன்னைக்கு ராவு புறப்படுகிற பிளேன்லே போவனும்...''

தந்திக்காரன் சொல்லிக்கொண்டே போகிறுன்.

எல்லோரும் திறந்த வாயுடன் நிற்கிறுர்கள். என்ன புதுமை என்ற முணு முணுப்புகள் எங்கும் தவழ்கின்றன. ஆமாம் ராஜம் அரபு நாடு போகப்போகிறுள்.

முற்றும்.

# சிரித்திரு

—அகிமதுரம்


திருவிழாவிற்குப் போய்வரும் எனது குடும்பத்தினருக்கு ''கோயிலில் கச்சான் வரம் வாங்கிவந்து வீட்டுக்குள் சிந்தாதீர்களெனப் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

---

ஒரு: இயமன் பாசக்கயிற்றில் இருந்து எப்படி தப்பினுய்.

போட்டோ பிடிப்பவர்; போட்டோவிற்குப் போஸ்கொடுக்கச் சொன்னேன்... சிரித்துப் போஸ் கொடுத்து விட்டு டாட்டா சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

---



மிருகங்களின் வாயை மந்திரத்தால் கட்டுகின்றீர்களே... அப்படி பேச்சாளர்களின் வாயைக் கட்ட முடியாதா... ஒலிபெருக்கிகளின் உபத்திரம் தாங்கமுடியவில்லையே!

---

ஓர் வரிசை



மனைவி: உங்களால் அப்பாவைப் பயமுறுத்தி வாங்கிய சீதனத்தை திருடனைப் பயமுறுத்திக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதே!

# உதிரிப் பூக்கள்

## நிச்சயார்த்தம்

கருத்தொருமித்த...
காதலரைப் பிரித்துவைக்க...
பெற்றேர்கள் நிச்சயித்தார்கள்
பாரிய சீதனத்தையும்,
பெரிய உத்தியோகத்தையும்,
சேர்த்துவைக்க...
பெரியோர்கள் நிச்சயித்தார்கள்
இப்போ...!
கணவனிடமிருந்து,
மனைவிக்கு ஜீவனும்சம்!
கோட்டார் நிச்சயித்தார்கள்,

ஸ்ரீதேவன்

## கதைத்தேன்

### பாவைப் பிள்ளைகள்

அந்தப் பணக்காரச் சிறுமி விளையாடிக் கொண்டிருந்தாள். அவள் முன்னே ஓர் அழகான பெரிய பொம்மை.

அதற்கு விதம்விதமான வண்ண உடுப்புகள் அவள்முன் குவிந்து கிடந்தன.

ஒவ்வொன்ருக அதனைப் பொம்மைக்குப் போட்டு அழகுபார்த்து ரசித்தாள் அவள்.

அவளருகே அவளது வேலைக்காரச் சிறுமி, கிழிந்தஆடைகள், கலைந்த தலை, வியப்பால் விரிந்த விழிகளுடன் நின்றிருந்தாள்.

பொம்மையின் உடுப்புக்களை ஏக்கத்துடன் தொட்டுப் பார்க்க முயன்ருள் அவள்.

''சீ... தொடாதே...'' சினந்த சிறுமியின் வெருட்டலில் வெலவெலத்துப் போனுள் அவள்,

சிலநிமிடங்கள் மறைந்தன—

ஓடிவிளையாடிக் கொண்டிருந்த பணக்காரச் சிறுமி வழுக்கிவிழுந்து வீரிட்டலறினுள்.

ஓடிவந்த வேலைக்காரச் சிறுமி அவளைத்தூக்கிவிட்டு, அவளின் அழுகையைக் காணச் சகிக்காதுதானும் அழுதாள்.

அவர்கள் முன்னேஅந்தப்பொம்மை எவ்வித உணர்சியுமின்றி சிரித்துக் கொண்டு நின்றது.

தேனுகா

## நாய்கள்

வீதியில் நின்ற இருநாய்கள் பேசிக்கொண்டன,
ஒன்று மற்றதிடம் கேட்டது. ''என்ன நெடுநேரமாய் அந்த மூலையில் கிடக்கும் கிழவனையே பார்த்துக்கொண்டிருக்கிருய்... யாரது?''
''பாவம்... அந்த மனிதன்... அவன்தான்... நானும் என் சகோதரர்களும் பிறந்த இருநாட்களில்... உபத்திரவம் என்று சொல்லி எங்களை எங்கள் தாயிடமிருந்து பிரித்து வந்து அதோ அந்த மூலைக்கருகில் இருக்கும் மதவின் கீழ் போட்டுவிட்டுப்போனவர்...'' என்றது மற்றது.
''அதுசரி இப்போ அவருக்கென்ன... ஏன் அந்த மூலையில் கிடக்கிருர்?''

''அவருடைய பிள்ளைகள் இவரை உபத்திரவம்பிடித்த கிழவன்'' என்று வெறுத் தொதுக்குகிருர்களாம்... பாவம்...''

''அவனுக்கு இப்படித்தான் வேணும்... அவனுக்குப் போய் பரிதாபப் படுகிருயே...'' என்றது முதலாவது.
''என்ருலும் எனது தாய்க்கு சிலகாலம் உணவு போட்டவரல்லவா...அவர்'' என நன்றியுடன் கூறியதுமற்றது.

நிபக்

## வேலை நிறுத்தம்

அந்தத் தொழிற்சாலையில் அநியாயமாக ஒருவன் வேலை நீக்கம் செய்யப்பட்டான்.
நீதிகோரி வேண்டுதல் விடப்பட்டது. நிர்வாகம் மறுத்தது. ஒவ்வொரு மனிதனுடைய உரிமையும் பாதுகாக்கப்படவேண்டும் என நினைத்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.
அந்தத் தொழிலாளியில் தனிப்பட்ட கோபம்கொண்ட சிலரும், சிலகருங்காலிகளும் வேலைக்குப் போயினர். ஆக—வேலைநிறுத்தம் தோல்வியுற்றது.
அதே தொழிற்சாலையில்— யந்திரங்களுக்கு 'ஒயில்'பண்ணிப் பாதுகாப்பவன் ஒருசிறு 'ஆணிக்கு ஒயில் பண்ணுவதைத் தவிர்த்து வந்தான். தன்னை நிராகரிப்பதை அவ்வாணி சப்தமிட்டு அடிக்கடி தெரிவித்தது—
கவனிப்பதாயில்லை.—
ஒருநாள் யந்திரத்தில் ஏதோ ஒருபிசகு. முழு யந்திரமுமே வேலைசெய்யவில்லை. யந்திரவல்லுனர்கள் கூடினர் முடிவில் அந்தசிறு ஆணி இறுகிக்கொண்டது தெரிய வந்தது. உடனடியாக பரிகாரம் செய்யப்பட்டது.
பணியாளன் பதவி நீக்கம் செய்யப்பட்டான். யந்திரம் இயங்க ஆரம்பித்தது வேலைநிறுத்தம் வெற்றிபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்திரு

கௌரி

அதிகாரி: வீடுகட்ட வேண்டும் என்று எங்கள் இலாகாவில் கடன்பெற்றயே. ஏன் வீடு கட்டவில்லை.

கடன் வாங்கியவர்: இப்போ சல் யூட் என்றவிண்வெளிக் கப் பல் பூமியில் விழப்போகு தாம். விண்வெளியில் உள்ள எல்லாக் கப்பல்களும் விழுந்த பிறகு வீடு கட்டினுல் சேத மடையாது என்றுதான்.



● உங்க மகனை நாடகத்திலே பிரகலாதனுக நடிக்க வைச் சது தப்பாப்போச்சு.


☐ ஏன்?

● நாராயணு என்று சொல்லும் படி நடிக்கச்சொல்ல முடியா தென்கிருன். ஏனென்றுகேட் டால் பக்கத்துவீட்டு நார யணனுடன் ஜன்மப்பகை யாம்

வானெலியில்: நீங்கள் விரும்பிக் கேட்கும் நிகழ்ச்சிகள் எவை?

நீங்கள் கேட்டவை

?...?...?



என் கணவர் அவரது தாயார் சாகும்வரை பக்கத்திலேயே இருந் தார். ஒருவிஞடிகூட விட்டுப் பிரியவில்லை.

அவ்வளவு பாசமா உன் கணவர் அம்மாமேல்.

இல்லை. காணி உறுதிகளில் கை யொப்பம் வாங்குவதற்காகத் தான்.

பத்திரிகைத் தலைப்பை அவ சரமாகப் படித்த ஒரு அவசரக் குடுக்கை தனது நண்பரிடம் ''பார்த்தீர்களா! மொரார்ஜி தேசாய்க்குப் போட்டியாக சரண் சிங்களத்தில் குதித்துப் போட்டி யிடுவார் என்று பேப்பரில் இருக் கிறது'' என்ருர். திடுக்கிட்ட அவர் நண்பர் பத்திரிகையை இழுத்துப் படித்தபிறகு தனது தலையில் அடித்துக் கொண்டார். மொரார்ஜிதோசாய்க்குப்போட்டி யாக சரண்சிங் களத்தில் குதித் துப் போட்டியிடுவார் என்பதே அது.

யமன்; தூதனே! நீ பூலோகம் சென்று அந்த மனிதனின் உயிரைக் கொண்டுவர இவ் வளவு தாமதம் ஏன் ஏற் பட்டது?

தூதன்: பிரபே! பூலோக வாசிகள் பூலோகத்தில் வாகனப் போக்குவரத்து இடநெருக் கடிகளை உண்டாக்கியது மல்லாமல் இப்போ விண் ணுலகத்துக்கும் கப்பல்களை அனுப்பி இடநெருக்கடி ஏற்படுத்தி விட்டார்கள். இங்கும் போக்குவரத்துக் கட்டுப்பாடு வேண்டும்.

● எங்கள் புதுலேடி டைப்பிஸ்ட் கந்தோரில் ஒரு சாதனையை நிலைநாட்டி விட்டாள்.

☐ எப்படி?

● இதுவரை ஸ்கைலாப் மாதிரி நாம் வேலை செய்கிருேமா என்று சுற்றிவலம் வந்து எரி ந்து விழுந்த மனேஜரைப் பெட்டிப்பாம்பாக அடக்கி விட்டாள்.

மிகவும் கசப்பான மருந்தை ஒரு நோயாளியிடம் குடிக்கச் சொல் லிக்கொடுத்து விட்டு நர்ஸ் போன பின் நோயாளி பாடியது.

'குடிப்பதற்கு மனமிருந்தால் குடி த்துவிடலாம், அவளை மறப்பதற்கு மனமிருந்தால் மறந்து விடலாம். ஹஹ்ஹா'

அதிகாரி ஒருவர் தனதுகறுத்த ஜீப்வண்டியில் மனைவியுடன் படம் பார்க்கப் போயிருந்தார். மனைவி யும் இடையிடை ஜீப் ஓட்டப் பழகுவதால் ஜீப்பில் 'எல்' போட் மாட்டியிருந்தது. படம் முடிந்து வெளியேவந்த அதிகாரி தனது கறுத்த ஜிப்வண்டியைக் காணுது திகைத்துப்போய்ப் பின்வருமாறு கத்தினுர்.

Where is my Black Jeep

## பள்ளிப் பகிடி

☐ ஏண்டா SSC எடுக்க மாட் டியாமே?

● ஆமா பிறகு SSC பாஸ் பண் ணிஞ பிறகு HSC எல்லாம் படிக்க வேண்டி வருமே அனுவசியமா!

ஆசிரியர்: விஞ்ஞானம் எவ்வளவு முன்னேறிவிட்டது காலை நேராக்க ஒருகிளிப், பல்லை நேராக்க ஒரு கிளிப்...

மாணவர்: சார் உங்க புத்திய நேராக்க ஒரு கிளிப்பும் இல்லையா?

வி. சந்திரமோகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லியடியிலே....

★ சேட்டிங்
★ சூட்டிங்
★ அழகு சாறிகள்
மற்றும் யாவற்றுக்கும்.

விஜயம் செய்யுங்கள்:

**சிற்றம்பலம் அன் சன்ஸ்**

மெயின் வீதி,
நெல்லியடி.

உங்கள் பலசரக்குத் தேவை
எதுவானாலும்

இன்றே நாடுக

**அம்பாள் ஸ்ரோர்ஸ்**

யாழ்ப்பாண வீதி,
பருத்தித்துறை.

உங்கள் ஆடைத்தேவைகள்
அனைத்துக்கும் வருகைதருக

**பூமா டெக்ஸ்**

யாழ்ப்பாண வீதி
நெல்லியடி.

பருத்தித்துறையிலே
நவீன மார்க்கெட்டிலே

சகலவித சாமன்களுக்கும்
விஜயம் செய்யுங்கள்.

**சரஸ்வதி ஸ்ரோர்ஸ்**

இல. 11 நவீன சந்தை,
பருத்தித்துறை.

உங்கள் பாடசாலைத் தேவைகளையும்
அறிவுலகத் தேவைகளையும் இவர் அறிவார்.

விஜயம் செய்யுங்கள்

**கமலா அன் பிறதர்ஸ்**

நவீன சந்தை
பருத்தித்துறை.

அழகுக்கு அழகுதரும் ஆடைகளுக்கு
எம்மிடம் வருக

**லக்கி ஸ்ரோர்ஸ்**

மெயின் வீதி,
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம தபாற்கந்தோரில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது. பதிவு இலக்கம் பி கியூ 35/000

நூலுலகில் ஒரு காவிய நூல்

அழகை ஆராதனை செய்பவர்கள்

தமது சித்திரத் தையல் வேலைகட்குப் பாவிப்பது

முயல் மார்க் நூலே!

தயாரிப்பாளர்கள்:

சம்பியன் திரெட்

மனுபக்சரிங் கம்பனி

கொழும்பு—12

559, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சி. சிவஞானசுந்தரம் அவர்களால், 559, கே. கே. எஸ் வீதியில் உள்ள தமது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org